# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஆகஸ்ட் 2006 ஜீவியம் 12 மலர் 4

## இம்மாத மலரில்..........

### பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அன்பர் கடிதம் | 2 |
| லைப் டிவைன் | 4 |
| இம்மாதச் செய்தி | 10 |
| எங்கள் குடும்பம் II | 11 |
| சாவித்ரி | 43 |
| டோக்கன் ஆக்ட் | 45 |
| அஜெண்டா | 55 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 57 |
| லைப் டிவைன் - கருத்து | 63 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

## ஜீவியத்தின் ஓசை

✡ ஆத்ம நிறைவு அன்னை நிறைவு.

✡ மனம் நிறைவது மனத்தைக் கடப்பதற்கு.

✡ மனத்தைக் கடந்த ஆத்மாவில் நுழைந்து ஆத்மா வளர ஆரம்பிப்பது அன்னை வாழ்வு.

# அன்பர் கடிதம்

**ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தருக்கு இக்கடிதம் சமர்ப்பணம்!**

என்னுடைய அம்மா உடல்நலக் குறைவால், திடீரென நடக்க முடியாமல் போனது. எனவே அவர்களை அருகிலுள்ள மருத்துவமனையில் அட்மிட் செய்தார்கள். நான்கு நாட்களுக்குப் பிறகு டிஸ்சார்ஜ் செய்தனர். Physiotherapy கொடுக்கப்பட்டது. இருப்பினும் அவர்கள் இயல்பான நிலைக்குவர நாளாகும் என்றனர். வீட்டிற்கு வந்ததும் அவரது நிலைமை இன்னும் மோசமானது. உணவு எதுவும் எடுத்துக்கொள்ள முடியாத நிலை. கடுமையான வயிற்று வலி. உடனடியாக அவரைப் பெரிய ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்தனர். அன்றோ ஞாயிற்றுக்கிழமை ஆதலால் எளிதில் அட்மிஷன் கிடைக்கவில்லை. என் தங்கை 12 மணி நேரம் வீல்சேரிலேயே ஒவ்வொரு டெஸ்டுக்கும் அழைத்துச் சென்றாள். இரவு 8½ மணிக்குத்தான் அட்மிஷன் கிடைத்தது. மறுநாள் என் தாயின் உடல்நிலை மிகவும் மோசமானது. ட்ரிப்ஸ் தொடர்ந்து 4 பாட்டில் ஏற்றினார்கள். Loose motion வேறு. எல்லா டெஸ்டுகளும் ஒவ்வொன்றாகச் செய்ய ஆரம்பித்தனர். நான் இருப்பதோ சென்னையில். என் மகள் +2 பரிட்சை நேரம் வேறு. செய்வதறியாது திகைத்தேன். என் தாய் அன்னை படமும் பிளஸிங் பாக்கெட்டும் வைத்திருந்தார்கள். மதர் சர்வீஸ் சொசைட்டிக்கு போன் போட்டு பிரார்த்தனை செய்யும்படிக் கேட்டுக் கொண்டேன். அவர்கள், மகளாகிய நான் பிரார்த்தனை மேற்கொண்டால் விரைவில் recovery ஆகிவிடுவார்கள் என்றனர். அதேபோல் என் தாயின் போட்டோ ஒன்றை அன்னை பகவான் பாதத்தில் வைத்து பிரார்த்தனை செய்தேன். டாக்டர்கள் என் தாய்க்கு appendicitis அல்லது intestinal infection இதில் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம் என்றனர். பலவிதமான டெஸ்டுகள் செய்துகொண்டு இருந்ததாகத் தகவல் மட்டும் போன்மூலம் கிடைத்தது. அங்குள்ள அனைவரையும் அன்னைபோல் பாவித்து பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். என் தாய்க்கு எந்த ஓர் உடல் உபாதையும் இருக்கக் கூடாதுஎன வேண்டினேன். என்ன அதிசயம்! எடுக்கப்பட்ட டெஸ்டுகள் அனைத்தும் நார்மலாகவே இருந்தன. அன்னைக்கு நன்றி கூறினேன். மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த என் தாயை காப்பாற்றிய தெய்வீக அன்னையின் பாதங்களில் கோடானு கோடி நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

டிஸ்சார்ஜ் செய்யப்பட்டவுடன் சென்னைக்கு அழைத்து வந்தேன். அவருக்கு ஒரு வாரம் பிஸியோதெரபி கொடுக்கப்பட்டது. இப்பொழுது என் தாய் walkerஐ வைத்துக்கொண்டு அவர்களாகவே நடப்பார்கள். இந்த அற்புதத்தைச் செய்த அன்னைக்குக் கோடானு கோடி நன்றியை, காணிக்கை ஆக்குகின்றேன். என் தாய் மீண்டும் உயிர்த்தெழுந்தது, என் தாயின் வாழ்வில் அன்னை செய்தது miracleதான். இதை என் கண்கூடாக நான் பார்த்துவிட்டேன். ஆஸ்பத்திரியில் இருக்கும்பொழுது மூன்றாவது நாள் யாரோ தன்னை முதுகுப்புறம் வருடியது போன்றிருந்ததாகவும் திரும்பிப் பார்த்தால் யாருமே இல்லை, துணைக்கு இருந்த என் மூத்த சகோதரியும் நல்ல உறக்கத்தில் இருந்ததாகவும், நர்ஸ் யாரும் இல்லை எனவும் என் தாய் கூறும்பொழுது என் தாயை வருடிய அந்தக் கரங்கள் என் அன்னையைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது.

பிரார்த்தனையின்போது "மலர்ந்த ஜீவியத்தில்" அன்பர் கடிதமாக எழுதுவதாக அன்னையிடமும் வேண்டிக்கொண்டேன்.

கடந்த மூன்று நாட்களாக என் தாயின் உடல்நிலை கொஞ்சம் சரி இல்லாமல் போகவே மிகவும் வருத்தமடைந்தேன். முதுகு வலியால் மிகவும் அவதிப்பட்டார், தூக்கமில்லை, பசியில்லை. நான் செய்ததெல்லாம் இதுதான். அன்னையிடம் ஒரு டம்ளர் தண்ணீர் வைத்து பிரார்த்தனை செய்துவிட்டு அவருக்குக் குடிக்கக் கொடுத்தேன். இதேபோல் மூன்றுமுறை செய்தேன். முதுகில் பிளஸிங் பாக்கெட் வைத்துவிட்டு, குப்புறப் படுக்கவைத்துவிட்டு, அன்னையின் திருவுருவப் படத்தைத் தலையிலிருந்து கால்வரை காண்பித்தேன். இதேபோல் இடைவெளி விட்டு செய்துகொண்டிருந்தேன். இன்றுகாலை என் தாயை பார்த்த எனக்கு மிகுந்த சந்தோஷம். காரணம் முதுகுவலி வெகுவாகக் குறைந்துவிட்டதாகவும், நல்ல பசி எடுப்பதாகவும் கூறினார்கள்.

இன்றுகாலை 10.30மணிக்கு டாக்டரிடம் அப்பாயிண்ட்மெண்ட் வாங்கியிருந்தேன். ஆனால் போகவில்லை. என் அன்னையின் அற்புதங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். மீண்டும் நலம்பெற்ற என் தாய்க்காக என் நன்றியை அன்னைக்கு இக்கடிதம்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**உடலின் குணம் ஒன்றை எல்லா நிலைகளையும் கடந்து உடலின் சொரணையாக்கி, மேலும் மனத்தின் திறனாக, சுபாவத்தின் அம்சமாக்குவது மறுபிறப்பு.**

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIV. The Supermind — As Creator

Page No.131
Para No.18

Thought is not self-divided.
Force is not self-divided.
Being is not self-divided.
In the mind they are self-divided.
In the Supermind they are not divided.
They are not broken.
They are not separated from each other.
The Supermind is Vast.
It starts from unity.
It does not start from division.
It is comprehensive.
It is its primary trait.
Differentiation is secondary there.
A truth of being is expressed.
The idea corresponds to it exactly.
The will-force too corresponds with it.
(Force is only power of consciousness).
No idea clashes with another idea.
No will or force clashes with another will or force.



## 14. சத்தியஜீவியம் - சிருஷ்டிகர்த்தா

எண்ணம் தானே தன்னைப் பகுப்பதில்லை.
சக்தியும் அப்படியே.
ஜீவன் தன்னைப் பிரித்துக்கொள்ளவில்லை.
மனத்தில் அவையெல்லாம் பிரிந்து காணப்படுகின்றன.
சத்தியஜீவியத்தில் அப்பிரிவினையில்லை.
அவை உடையவில்லை.
ஒன்று மற்றதிலிருந்து வேறுபட்டதில்லை.
சத்தியஜீவியம் பரந்தது.
அதன் அடிப்படை ஐக்கியம்.
அது பிரிவினையிலிருந்து ஆரம்பிக்கவில்லை.
அது பூரணமானது.
அதுவே அதன் அடிப்படைக் குணம்.
மாறுபாடு அடுத்த விஷயம்.
ஜீவனின் சத்தியத்தை வெளிப்படுத்துகிறோம்.
எண்ணம் அதைச் சரியாகப் பிரதிபலிக்கிறது.
சித் சக்தியும் அப்படிப் பிரதிபலிக்கிறது.
(சக்தி ஜீவியத்தின் திறன் வெளிப்பாடு).
எந்த எண்ணமும் அடுத்த எண்ணத்துடன் மோதுவதில்லை.
சக்தியோ, செயலோ அடுத்த சக்தியுடன் மோதுவதில்லை.

**In man they clash.**
**In the world they clash.**
**There is one vast Consciousness.**
**It contains and relates all ideas in itself as its own ideas.**

**There is one vast Will.**
**It contains all energies.**
**It relates all energies as its own energies.**

**It holds back this.**
**It advances that other.**
**It acts according to its own preconceiving Idea-Will.**

**Omnipresence, Omnipotence, Omniscience** **Page No.131**
**are current religious notions of the Divine Being.** **Para No.19**
**The above justifies them.**
**They are not irrational imagination.**
**They are perfectly rational.**
**They do not contradict logic.**
**Nor is the experience against them.**
**There is one error.**
**It is to separate God and man, Brahman and the world.**

**It makes the differentiation into division.**
**We shall speak of this later.**
**Now we arrived at one idea.**
**It is a conception of the Supermind.**
**There being, consciousness, will, delight are one.**
**Yet it is capable of infinite differentiation.**
**Still it does not destroy unity.**



**மனிதனில் அம்முரண்பாடுண்டு.**
**உலகில் அம்மோதல் உண்டு.**
**ஓர் பரந்த ஜீவியம் உண்டு.**
**அனைத்தையும் தன்னுட்கொண்டு, எல்லா எண்ணங்களையும் தழுவி தன் எண்ண-மாக்குகிறது.**
**ஒரு பரந்த உறுதியுண்டு.**
**அது எல்லா சக்திகளையும் தன்னுட்கொண்டது.**
**எல்லா சக்திகளுடனும் தொடர்புகொண்டு அவற்றைத் தன் சொந்த சக்தியாக்-குகிறது.**
**ஒன்றை மறைத்து வைக்கிறது.**
**மற்றதை முன்னிருத்துகிறது.**
**தான் முன்கூட்டி முடிவு செய்தபடி அது செயல்படுகிறது.**

**எல்லாம் அறிந்தவன், எல்லாம் வல்லவன், எங்கும் நிறைந்தவன்என ஆண்டவனை மதங்கள் கூறுகின்றன.**
**நாம் மேற்கூறியது இதைச் சரியெனக் கூறும்.**
**அவை அர்த்தமற்ற கற்பனையில்லை.**
**அவற்றிற்குப் பூரண அர்த்தம் உண்டு.**
**அவை தர்க்கத்திற்குப் புறம்பானவையல்ல.**
**அனுபவமும் அதற்கெதிரானதன்று.**
**ஆனால் ஒரு தவறுண்டு.**
**மனிதனையும், ஆண்டவனையும் பிரிப்பது தவறு. பிரம்மத்தையும் உலகையும் பிரிப்பது தவறு.**
**அது மாறுபாட்டை வேறுபாடாக்கும்.**
**இதைப் பற்றிப் பிறகு பேசுவோம்.**
**இப்பொழுது நாம் ஒன்றைக் கண்டோம்.**
**அது சத்தியஜீவியம்.**
**அங்கு ஜீவன், ஜீவியம், ஆனந்தம், செயல் ஒன்று.**
**இருப்பினும் அது அனந்தமாகப் பிரியவல்லது.**
**பிரிந்தாலும் ஐக்கியம் அழிவதில்லை.**

**There Truth is the substance.**
**Truth rises in the Idea.**
**Truth comes out of the form.**
**There is one truth of knowledge and will.**
**There is one truth of self-fulfillment and delight.**
**Self-fulfillment is the satisfaction of the being.**
**In all mutations there is a harmony.**
**It is self-existent and inalienable.**
**It is equally so in all combinations.**

*The End.*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சாஷ்டாங்க நமஸ்காரம், சரணாகதியை உடலால் வெளிப்படுத்துகிறது.

அடுத்தவன் வலிமையையும், உயர்வையும் ஏற்றுக்கொள்வதால் சரணாகதி உணர்வில் வெளிப்படுகிறது.

மற்றவரின் எல்லாக் கருத்துகளையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலை - மனம் சரணாகதியை ஏற்றுக்கொண்டதாகும்.

ஏதும் அறியேன் என்பது வழக்கு மட்டுமன்று; சத்தியம் என்று தெளிவுற நம்புவது அடக்கம். அடுத்தவரின் நிலை எதுவானாலும் அதற்கு உயர்ந்த மதிப்பை உள்ளபடி கொடுத்து மனதால் ஏற்றுக்கொள்வது நடைமுறையில் உண்மையான சரணாகதியை வெளிப்படுத்தும் அடக்கமாகும்.

***ஏதுமறியேன் என்பது சரணாகதிக்குரிய அடக்கமாகும்.***



**சத்தியம் பொருளாகும்.**
**சத்தியம் எண்ணத்தில் எழுகிறது.**
**சத்தியம் ரூபமாக எழுகிறது.**
**ஞானமும், உறுதியும் ஒன்று என்று அறிகிறோம்.**
**ஆனந்தம், ஆத்மதிருப்தியாகிறது.**
**ஜீவன் பெறும் ஆனந்தம் ஜீவானந்தம்.**
**பிரிவினையில் சுமுகமுண்டு.**
**சுமுகம் அழியக்கூடியதில்லை, சுயமானது.**
**இணைவதிலும் சுமுகம் அப்படியே.**

*முற்றும்.*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மேலெழுந்த நிலையிலுள்ள மனத்திலிருந்து ஆழத்திற்குச் செல்ல பல வழிகளுண்டு. ஆழ்ந்து பார்த்தால் அவை அனைத்தும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான முறைகள் எனலாம்.

(1) சமாதி நிலையை நோக்கிப் போகும் நிஷ்டை.
(2) எண்ணத்தையும், உணர்வையும், செயலாற்றும் திறனையும் விட்டுவிட முடிவு எடுப்பது.
(3) எண்ணத்தையோ, உணர்வையோ, உடலசைவையோ ஒருமுகப்படுத்தி ஒருநிலைப்படுத்துவது.
(4) மௌனம்.
(5) பெரிய திட்டங்களைக் கைவிடுவது.
(6) மன உறுதியை அதிகபட்ச நிலைக்குக் கொண்டு போவது அல்லது கரைப்பது.

## இம்மாதச் செய்தி

**பெண்ணின் இனிமையும், பெருமையும்**

**யோகத்தை வாழ்வாகவும்,**

**வாழ்வை யோகமாகவும்**

**மாற்ற வல்லது.**



# எங்கள் குடும்பம் II

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

**கணவர் - இப்பொழுது சொல்லலாமா? எனக்கு மழை பெய்யும் பொழுது தோன்றவில்லையே:**

- ✡ **கணவர் மழை பெய்ததால் சந்தோஷப்பட்டபொழுது மனைவி எச்சரித்தாள். சந்தோஷம் அகந்தையை வளர்க்கும். நன்றி கூறுவது முறை என்றாள். தமக்கு நன்றி நினைவு வரவில்லைஎன்று கூறுகிறார்.**
- ✡ **அன்று மறந்த நன்றியை இன்று கூற அது சற்று ஆழமாக இருக்க வேண்டும். மழை தேவை. தேவை நம்முள் உள்ள ஆழத்தைவிடச் சற்று ஆழமாக நன்றியெழ வேண்டும்.**
- ✡ **மறந்தது கடந்தகாலம். நன்றிகூற நினைப்பது நிகழ்காலம். அதைச் சரிசெய்ய இடைவெளியை மீறவேண்டும். மீற நன்றி ஆழத்திலிருந்து எழவேண்டும். நிகழ்காலத்துள் கடந்தகாலம் உண்டு. அங்கிருந்து நன்றிகூறினால் அது கடந்தகாலத்திலிருந்து கூறியதற்கு ஒப்பாகும்.**
- ✡ **பள்ளியைவிட்டு 10 ஆண்டுகள் கழித்து படிப்பைத் தொடர விரும்பினால் அதிக முயற்சி வேண்டும். அல்லது இப்பத்து ஆண்டுகளில் அறிவு வளர்ந்திருக்கும். அவ்வறிவைப் பயன்படுத்திப் படித்தால் சாதாரண முயற்சி போதும்.**
- ✡ **நன்றிஎன்பது உடல் இறைவனைக் காண்பது.**
- ✡ **மனம் சொல்லையறியும், உணர்வை அறியாது.**
- ✡ **உயிர் உணர்வை அறியும், செயலை அறியாது.**
- ✡ **உடல் செயலை அறியும், அது முழு அறிவு.**
- ✡ **செயலை அறியும் உடல், செயலின் முழுமையை அறியாது.**

✡ செயலின் முழுமையை உடலின் சைத்தியப்புருஷன் அறியும்.

✡ உடலின் சைத்தியப்புருஷன் சத்தியஜீவன்.

✡ சத்தியஜீவன் இறைவனை அறிவது நன்றியறிதல்.

✡ நமக்கு சத்தியஜீவனில்லை.

✡ சைத்தியப்புருஷனுமில்லை.

✡ நடப்பதை ஆழ்ந்துணர்வது நன்றி.

✡ ஆழ்ந்துணர்ந்தால் சைத்தியப்புருஷன் வெளிவருவான்.

✡ செயலுக்கு முடிவுண்டு.

✡ அதுவே அதன் ஆழம்.

✡ செயலின் முடிவும், நன்றியறிதலும், உடலின் சைத்தியப்புருஷனும், சத்தியஜீவனும் ஒன்றே.

✡ அவை ஒன்றேஎன்ற ஞானம் நன்றியுணரும் ஞானம்.

✡ இடைவிடாத நன்றி இறைவனின் வாழ்வு.

மனைவி - தோன்றுவதுடன் உடல் புல்லரிக்க வேண்டும்:

✡ கண்ணை மூடிக்கொண்டிருந்தால் பார்க்க முடியாது.

✡ திறந்துகொண்டிருந்தாலும் மனத்தில் பட்டதே கண்ணில் படும்.

✡ எதிரேயிருப்பதும் சமயத்தில் நம்கண்ணில் படுவதில்லை.

✡ ஒரு வினாடி நம்பார்வையில் சில விஷயங்கள் பட்டாலும், அவை நம் பார்வைக்குத் தப்புவதில்லை.

✡ மனம் தேடும் விஷயம் தவறாது கண்ணில் படும்.

✡ பார்ப்பது மனம்; கண் வாயில்.

✡ பார்ப்பது மனமன்று, ஜீவன், சைத்தியப்புருஷன்.

✡ அவன் உறங்குவதால் மனம் பொருள்களைக் காண்கிறது.



✡ ஜீவனில் சைத்தியப்புருஷன் விழித்துக்கொண்டால் எதிரேயுள்ளவர் மனத்திலிருப்பதும், அவர்கள் பின்னால் மறைந்திருப்பதும் அவனுக்குத் தெரியும்.

✡ நடப்பவை அனைத்தும் நாராயணன் செயல்.

✡ அனைத்தும் நாராயணன்.

✡ செயலே நாராயணன்.

✡ நாம் நாராயணனைக் காண்பதில்லை, செயலைக் காண்கிறோம்.

✡ நாராயணன் நகர்ந்து செயல்படுவதை சைத்தியப்புருஷன் காண வேண்டுமானால், அது உடலின் சைத்தியப்புருஷனாக இருக்க வேண்டும்.

✡ காதுக்கு ஒலி, உடலுக்கு உணர்ச்சி, நாக்குக்கு ருசி, கண்ணுக்குப் பார்வைபோல், உடலின் சைத்தியப்புருஷனுக்குரிய உணர்வு நன்றியறிதல்.

சைத்தியப்புருஷனின் உணர்ச்சி நன்றியறிதல்.

✡ சைத்தியப்புருஷனில்லாதவர்க்கு எப்படி நன்றியறிதல் எழும்?

✡ வேலை வாங்கிக் கொடுத்தவர்க்கு நன்றி சொல்லியவரில்லை.

மேலும் அவரிடம் சலுகைபெறும் வாய்ப்பிருந்தால் 'நன்றி' கூறுவார்கள்.

அது நன்றியாகாது, எதிர்பார்ப்பாகும்.

✡ உயிர் இப்பொழுதே போகுமா, 24 மணி நேரத்தில் போகுமா என்றிருந்தவர்க்கு எந்த டாக்டருக்கும் தோன்றாத மருந்து தோன்றி எழுதிக் கொடுத்தார். உயிர் பிழைத்தது. டாக்டருக்குச் சொல்லவில்லை. 4 மாதங்கள் கழித்து மீண்டும் அதே நிலை வரும்பொழுது, அதே டாக்டரிடம் செல்கிறார். டாக்டர் மீண்டும் காப்பாற்றுகிறார். X-ray எடுக்கச் சொல்லுகிறார். X-ray எடுத்துக்கொண்டபின் டாக்டர் வீட்டுக்குப் போய்விட்டார்எனத் தெரிகிறது. முதலில் நன்றி சொல்ல மறந்ததால், இம்முறை X-rayயைப் பார்க்க டாக்டரில்லை. அக்காரணம் தெரிவதுமில்லை.

- ✡ நன்றி உடலைப் புல்லரிக்கச் செய்யும்.
- ✡ நன்றியுள்ளவர் நானிலத்தில் நாராயணனுக்குரியவர்.
- ✡ நன்றி பூரணயோகக் கருவி.

மனைவி - பவர் பிராஜெக்ட்டுக்கும் மழைக்கும் சட்டம் ஒன்றுதான்:

- ✡ சட்டம் அனைவருக்கும் பொது, அனைத்திற்கும் பொதுஎன்பது புரிந்தாலும், மனம் அக்கருத்தை முழுவதும் ஏற்பதில்லை.
- ✡ சர்க்காரில் லீவு (casual leave) 12 நாட்கள் என்றால், கடைநிலை ஊழியருக்கும், இலாக்கா தலைவருக்கும் ஒன்றேஎன்பது நாமறிவது.
- ✡ உடல் டெம்பரேச்சர் 98.4° F என்றால் சிறு குழந்தைக்கும், வயதானவர்க்கும் அது பொது.
- ✡ இராமவதாரத்தில் இராமன் யானைஎன நினைத்து ஏவிய அம்பு, குருடர்கள் மகனைக் கொன்றது. அக்கர்மம் கிருஷ்ணாவதாரத்தில் வேடன் எய்த அம்பினால் கிருஷ்ணன் காலில் காயம்பட்டு இறந்தான். கர்மம் கடவுள்களையும் கட்டுப்படுத்தும்.
- ✡ காணாமற்போன பேனாவைத் தேடும் பிரார்த்தனையும், பவர் பிராஜெக்ட்டுக்கு உள்ள பிரார்த்தனையும் ஒன்றேஎன்பது ஓரளவு புரிந்தாலும் மனம் ஏற்க மறுக்கிறது.
- ✡ கவர்னருக்கும், வெறும் மனிதனுக்கும் எலக்ஷனில் ஓட்டு ஒன்று.
- ✡ 60 வாட் பல்பில் ஓடும் மின்சாரமும், 60 H.P. மோட்டாரில் வரும் மின்சாரமும் ஒன்றே.
- ✡ இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக அமையும் சட்டம் சர்வம் பிரம்மம். கல்லில் உள்ள பிரம்மமும், கடவுளில் உள்ள பிரம்மமும் ஒன்றே.
- ✡ ரிஷிக்கும், சாதாரண மனிதனுக்கும் கோபம் பொல்லாதது. பெற்றதை அழிக்கவல்லது.



- ✡ தோற்றம் வேறு, உள்ளுறை விஷயம் வேறுஎன நம்மால் பிரித்துப்பார்க்க முடியவில்லை.
- ✡ வியாதி வந்தால் டாக்டரும், நோயாளியாகிறார். வியாதியைப் பொருத்தவரையில் டாக்டர், நோயாளிஎன்ற வித்தியாசமில்லை.
- ✡ துரும்பைக் கிள்ளிப்போட்டு மாப்பிள்ளைஎன்றால் துரும்பும் துள்ளும்.
- ✡ இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவார்என்பது சிறியவர், பெரியவர், நல்லவர், கெட்டவர் ஆகிய அனைவருக்கும் ஒன்றே.
- ✡ அன்பு, வெறுப்பு, கோபம்என்பன மனிதனுக்குள்ளன. நாடு, படிப்பு, செல்வம் ஆகியவற்றால் அவை பாதிக்கப்படவில்லை.
- ✡ மார்க்கட் சரிகிறது, ஏறுகிறதுஎன்றால் அவை எவர் கட்டுப்பாட்டிலும் இல்லை. ஷேர் கம்பனியுடையதுஎன்றால் அதற்கும் சட்டம் அதுவே. அது சர்க்காருக்கும் கட்டுப்படாது. சட்டம் ஒன்றே.
- ✡ வெய்யிலின் கடுமை எல்லா மனிதரையும், எல்லாப் பொருள்களையும், எல்லா விலங்குகளையும் சமமாகப் பாதிக்கும்.
- ✡ டாக்டருக்கு மருந்து கசக்காதா?
- ✡ முதன் மந்திரியானாலும், பிரதம மந்திரியானாலும் எலக்ஷனை எதிர்கொள்ள வேண்டும்.
- ✡ தாய், பிள்ளையானாலும் வாய், வயிறு வேறு.
- ✡ ஒருவர் வியாதிக்கு அடுத்தவர் மருந்து சாப்பிட முடியாது. தலைவருக்காகத் தொண்டர் மருந்து சாப்பிட முடியாது. சிஷ்யனுக்காக குரு மருந்து சாப்பிட இயலாது.
- ✡ மலை போன்ற ஸ்ரீ அரவிந்தர் சக்தியும் அன்னைக்கு 107° F ஜுரம் வந்தபொழுது வியாதி என்னஎன்று தெரியாமல் செயல்பட முடியவில்லை.

அவரே (பிரெஞ்சுக்காரரே) தமக்கும் அன்னையைத் தெரியும் என்றார். “எங்களூர்க்காரராயிற்றே” என்றார்:

- ✡ எந்தச் செயலிலும் பழைய தொடர்பு பெரும்பாலுமிருக்கும்.
- ✡ நாம் அவற்றைக் கவனிப்பதில்லை.
- ✡ கவனித்தால் புரிவதில்லை.
- ✡ புரிந்தால் ஆர்வமிருப்பதில்லை.
- ✡ புதிய தொடர்புகள் எழும்.
- ✡ எல்லா விஷயங்களும் எல்லா விஷயங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்பது சட்டம்.
- ✡ Each is in all, all is in each. ஒவ்வொன்றும் மற்றதிலும், மற்றவை நம்முள்ளும் உள்ளனஎன்பது உபநிஷதம்.
  - ❀ நமது கடந்தகாலம்என்பது ஒன்று.
  - ❀ நம் முன்னோர் கடந்தகாலம்என்பது அடுத்தது. பூர்வஜென்மத் தொடர்புண்டு.
  - ❀ பெயர் தொடர்ந்து வரும்.
  - ❀ இராசி தொடரும்.
  - ❀ சுபாவம் தொடர்பைக் காட்டும். ஜாதி, ஊர், குடும்பம் தொடர்புகளைக் காட்டும்.
  - ❀ வெளியூரில் வேலை செய்யப்போன இடம், எல்லாம் புதியது. அங்கு நம்மூர்க்காரரிருக்கிறார். அவர் முக்கியஸ்தர். அவருக்கு நம்மூரில் நம் குடும்பம் தெரியும்என்பது தொடர்பு.
  - ❀ புதிய தொடர்பு, முற்றிலும் புதியது. நாளானபின் அவரது பால்ய நண்பன் நமக்கு ஏற்கனவே தெரிந்தவன். அவ்விருவரும் ஒரே குணமுள்ளவர்கள்.
  - ❀ இன்று நமக்கு நெருக்கமானவர் இருவர் 50 ஆண்டுகட்குமுன் நாம் விரும்பியவர் பெயரைத் தாங்கியுள்ளவர். பெயரில் சிறு மாற்றமுண்டுஎன்பது தொடர்பைக் காட்டுகிறது.
  - ❀ இன்று நான் அன்னையை உலகுக்கு அறிவிக்க முயல்கிறேன் எனில் 40 ஆண்டுகட்குமுன் என் வாழ்வில் நுழைந்தவர் இராமலிங்க சுவாமிகளின் புகழ் பரப்ப விரும்பியவர். அவர்



எண்ணம் அன்று பூர்த்தியாகாதது இன்று என்மூலம் என் வாழ்வில் பூர்த்தியாகிறது.

- ❀ பிரெஞ்சுக்காரருக்கு அன்னையைத் தெரியும்எனில் இன்று நாம் அன்னை பக்தர்என்ற அளவில் தொடர்பு தெரிகிறது. என்ன தொடர்பு? ஏன் இத்தொடர்பு ஏற்பட்டது? என்பவை மேலும் ஆராய்ச்சிக்குரியவை.
- ❀ லியனார்டோவின் நோட்டில் எழுதிய அனைத்தும் ஸ்ரீ அரவிந்தர் பிறந்தபின் பூர்த்தியாயின.
- ❀ பிரெஞ்சுப் புரட்சிக்கும், இமயமலை தவசிக்கும் தொடர்புண்டுஎன நாம் கற்பனையும் செய்யமுடியாது. பகவான், "அப்படி எழுந்ததே சுதந்திரமான பிரெஞ்சுப் புரட்சி'' என்கிறார். பிரான்சில் பிறந்த அன்னை பிரெஞ்சுப் பகுதியான பாண்டிச்சேரிக்கு வந்தது அதனாலாஎன்பது யோக ஆராய்ச்சிக்குரியது.
- ❀ உலகில் சக்தி செயல்படுகிறது. அது தன்னைப் பூர்த்தி செய்கிறது. அதற்கு நாம் கருவிஎன்ற கோணத்தில் புரியக்கூடியவை இவை.
- ❀ 1939இல் சர்ச்சிலுக்கு ஸ்ரீ அரவிந்தர் உலகப்போரை வெல்ல சக்தியை அனுப்பினார். சர்ச்சில் இந்தியச் சுதந்திரத்திற்கு எதிரி என்பதால் 1945இல் பகவான், சர்ச்சிலை பதவி நீக்கம் செய்தார். 1947இல் சர்ச்சில் இந்திய சுதந்திரத்தை ஆதரித்துப் பார்லிமெண்ட்டில் ஓட்டுப் போட்டார்என்பது அன்று இங்கிலாந்தில் அனைவருக்கும் ஆச்சரியம் தந்தது. திரைமறைவில் நடந்ததை நாம் அறிவதால் இந்தியச் சுதந்திரத்தில் இந்த ஓர் அம்சம் நமக்குப் புரிகிறது. இறக்கும்தருவாயில் பூர்வஜென்ம ஞானம், க்ஷணத்தில் ஏற்கனவே இருந்த தொடர்புகள், இனி ஏற்படப்போகும் தொடர்புகளை நமக்கு அறிவுறுத்துகிறது.

பார்ட்னருக்கு உள்ளே 'ஜில்' என்றது:

✡ உள்ளே என்பது அடிமனம் (subliminal).

✡ 'ஜில்' என்பது சைத்தியப்புருஷன் செயல்படுவது. அது காரியம் முடியும், நல்ல காரியம்எனக் காட்டுகிறது.

✡ 'சொரேர்'என்பது பிராணன், உயிர். ஆபத்து எழுவதைக் காட்டுவது.

✡ 'பளிச்'என்பது அறிவுக்குப் புரிவது.

✡ 'நன்றியறிதல்' புல்லரிக்கும். அது உடலில் சைத்தியப்புருஷன் வெளிப்பட்டு இறைவனை அறிவது.

✡ பயம் எச்சரிக்கை செய்வது.

✡ பிரியம் கவர்ச்சிக்குரியது.

✡ பசி, தாகம் உடல் உணர்வுகள்.

✡ விருப்பு வளர உதவும்.

✡ வெறுப்பு தற்காப்புக்குரியது.

✡ ஆசை செயலுக்கு உந்துவது.

✡ அன்பு ஆண்டவனிருப்பதைக் காட்டுவது.

✡ நிதானம் கூடிவருவதைக் குறிக்கும்.

✡ பொறுமை இறைவனின் இயல்பு.

✡ அவசரம் காரியம் கெடுப்பதைக் குறிக்கும்.

✡ எரிச்சல் இயலாமை.

✡ உஷார் தற்காப்புத் திறமை.

✡ குழப்பம் அறிவைக் கடந்த நிலையை அறிவிக்கும்.

✡ சிக்கனம் பணத்தை நம்புவதைக் காட்டும்.

✡ பராமுகம் நாம் அவரைவிட உயர்ந்ததைக் காட்டும்.

✡ நினைவு அறிவு செயல்படுவது.

✡ மறதி இனி அவ்விஷயம் நமக்குத் தேவையில்லை என்பது.

✡ போட்டி வளர முயல்வது.



✡ பொறாமை பிறரை அழித்து நம் அந்தஸ்தை நிலை நிறுத்துவது.

✡ தீவிரம் வளர முயல்வது.

✡ மரியாதை அந்தஸ்து.

✡ சொத்து வாங்கப் பிரியப்படுவது அந்தஸ்திற்கு அஸ்திவாரம்.

✡ நட்பு உணர்வால் வளர்வது.

✡ படிப்பு அறிவால் வளர்வது.

✡ செயல், உடலுக்கு உரமளிப்பது.

✡ விஸ்வாசம் பண்பால் உயர்வது.

✡ குடும்பப்பாசம், சுயநலம் பரநலமானது.

✡ பிறர்க்குதவி செய்ய முயல்வது வளரும் திறமை எழுவது.

✡ பிறர்க்குதவி செய்ய மறுப்பது, தாம் வளர்ந்து வளர்ச்சியைப் பாதுகாப்பது.

✡ அரசியல் கவர்ச்சி, தலைமைக்குரிய தன்மை.

✡ பணம் சம்பாதிப்பது, power பவர்மூலம் வளர முயல்வது.

கணவருக்கு அப்படியில்லை. மனைவிக்கும் அப்படியில்லை (‘ஜில்’லென):

✡ ஜில்லென இருப்பது இறையுணர்வு.

✡ இறையுணர்வு நமக்கிருப்பதால் அடுத்தவர் நமக்கு உதவ முயல்வது இயல்பு.

✡ நமக்கு இறையுணர்வு - 'ஜில்'என்ற உணர்வு - இல்லாதபொழுது இறையுணர்வு உள்ளவர் நமக்கு உதவுவது, சேவை செய்வது அருள்.

✡ மனிதனுக்கு விலங்கும், தாவரமும் உணவாகின்றன.

✡ மனிதன் அவற்றை வளர்க்கிறான்.

- ✡ அவை மனிதன் வளர உதவுகின்றன. அவை அவனுக்கு அத்தியாவசியம்.
- ✡ தாவரமும், விலங்கும் மனிதனுக்குக் கீழ்ப்பட்டவை.
- ✡ கீழ்ப்பட்டவையும், மேற்பட்டவையும் ஒன்றுக்கொன்று உதவுவது உயர்வு, தாழ்வுஎன்பது சமூகவாழ்வைக் கடந்ததில்லைஎன அறிவிக்கிறது.
- ✡ உயர்வு, முக்கியம், நல்லது, கெட்டது, நியாயம், தர்மம்என்பவை சமூகத்தைச் சேர்ந்தவை. சமூகத்தைக் கடந்த நிலையில் அவற்றிற்கு அர்த்தமில்லை.
- ✡ விளையாட்டுப்பொம்மை சிறுவயதிற்குரியது. வளர்ந்தபின் அர்த்தமற்றது.
- ✡ வேலை செய்து சம்பாதிப்பது சொத்தில்லாத நிலைக்குரியது. சொத்து வந்தபின் வேலை தேவையில்லை.
- ✡ சிந்தனை அறிவுக்குரியது. அறிவு வந்தபின் சிந்தனை தேவையில்லை.
- ✡ மோட்சம் பகுதியான ஆத்மாவுக்குரியது. ஆத்மா தன் முழுமையை அறிந்தால் மோட்சம் தேவையில்லை.
- ✡ அடிமை சுதந்திரத்தைத் தேடுகிறான். விடுதலை பெற்றபின் சுதந்திரம் பொருட்டன்று.
- ✡ ஏழைக்கு வசதி தேவை. பணக்காரன் வசதியை நாடுவதில்லை.
- ✡ தாழ்த்தப்பட்டவனுக்குப் பணம், பதவி, அந்தஸ்து தேவை. தாழ்வு போனபின் மனம் அவற்றை நாடாது.
- ✡ Human love பிரியம், நட்பு, காதல் ஆகியவை பகுதியான மனிதனுக்கு உரியவை. முழுமையை எய்தியவனுக்கு அவை இயல்பாக உண்டு என்பதால் அவன் அவற்றை நாடமாட்டான்.
- ✡ நோயாளிக்கு மருந்து, சிகிச்சை தேவை. உடல் நலமானால் மனம் அவற்றை நாடாது.
- ✡ திறமையற்றவனுக்குச் சாதனை. திறமையுள்ளவனுக்குச் சாதனை தேவையில்லை.



- ✡ மனிதனுக்கு மரணம் பயம் தரும். அமரத்துவம் அடைந்தவனுக்கு மரணம் வாழ்வில் ஒரு கட்டம்.
- ✡ புரியாதவன் பேசுவான். தமக்குப் புரிந்தபின் பேச்சு எழாது.
- ✡ ஆழத்தில் புரியாதவரை எழுதவேண்டிய அவசியம் உண்டு. அடிமனம் புரிந்துகொண்டபின் எழுத வேகமிருக்காது.
- ✡ உலகுக்குணர்த்த எழும் வேகம் நமக்குப் புரியாதவரை இருக்கும். நமக்குப் புரிந்துவிட்டால் உலகுக்குணர்த்தத் தோன்றாது.
- ✡ நாம் முழுமை பெறாதவரை பிறர்க்குதவத் தோன்றும். முழுமை உள்ளவனுக்கு அது இருக்காது.
- ✡ அந்தஸ்து தேவைப்படுபவனுக்கு ஆடம்பரம் வேண்டும்.
- ✡ உணர்ச்சி வறண்டுபோனால் நீர்ப்பஞ்சம் ஏற்படுகிறது. உணர்ச்சி நிறைவாக இருந்தால் நீர்வளமிருக்கும். நீர்வளமில்லாவிட்டாலும் உணர்ச்சி நிறைந்தவனுக்கு அது பாதிக்காது.
- ✡ கட்டுப்பாடில்லாதவன் கேட்பான்.

கணவர் அதிர்ந்துபோனார்;
மனைவிக்கு அன்னை நினைவு கண்களை நிரப்பியது:

- ✡ அதிர்ச்சிஎன்பது ஆபத்தால் ஏற்படுவதைப்போல் அதிர்ஷ்டத்தாலும் ஏற்படும்.
- ✡ அதிர்ஷ்டம் வரும்பொழுது, தரித்திரம் தான் இறப்பதைக் காண்பதால் அதிர்ச்சியடைகிறது.
- ✡ ஒரு நிலை மாறி அடுத்தநிலை எழும்பொழுது அதிர்ச்சியடைகிறது.
- ✡ அதிர்ச்சி, நிலைக்கு வந்த ஆபத்து.
- ✡ அதிர்ச்சி உணர்வின் புரட்சி.
- ✡ உடல் - ஜடம் - மாறாத, நிலையான வாழ்வை நாடுகிறது.

✡ வாழ்வு ஜடத்தை மாற்றியபடியிருக்கிறது. அது செய்வது புரட்சி.

✡ அறிவு புதிய எண்ணத்தை எழுப்பும். வாழ்வு அதை ஏற்றால் புரட்சி மலர்ச்சியாகும்.

✡ அறிவுக்கு அடிப்படை உடல் என்பதால், புதியஅறிவை உடல் எதிர்த்-தால் புரட்சி ஏற்படும். உடல் ஏற்றால் தான் மாற முனையும். புரட்சி விலகி மலர்ச்சி ஏற்படும்.

✡ அடிமைநாடு சுதந்திரம்பெற ஆயுதம் தாங்கும்.

✡ உலக வரலாற்றில் ஆன்மா செயல்பட்டு அடிமை நீங்கிய முதல் நிகழ்ச்சி இந்தியச் சுதந்திரமாகும்.

✡ இந்தியச் சுதந்திரம் உலகில் ஆன்மீகம்பெற்ற சுதந்திரம்.

✡ இந்தியா ஆசியநாடுகளின் தலைமைக்குரியது என்பதால் இந்தியச் சுதந்திரம் ஆசிய விடுதலையைப் பெற்றது.

✡ சுதந்திரம் ஆன்மீகத்தால் வந்தாலும், அரசியல் தலைமை ஆன்மீகத்தை - சத்தியத்தை - எதிர்த்ததால் நாடு பிளவுபட்டு, உயிர்ச்சேதம் எழுந்தது.

✡ பகவான் ஸ்ரீ அரவிந்தர் இரண்டாம் போரைத் தவிர்க்க முயன்றார். அது முடியாதுஎனக் கண்டு போரை வெல்ல முயன்றார்.

✡ போர் ஆரம்பிக்கும்முன் அவர் தொடைஎலும்பு முறிந்தது.

✡ தொடைஎலும்பு கூடியபின் கால்தாங்கல் சற்றிருந்தது.

✡ சுதந்திரம் வந்தபின் நாடு பிளவுபடும் என்பதை அது காட்டுகிறது.

✡ உலகம் அருளை ஏற்கவில்லை.

✡ அருளை ஏற்றிருந்தால் அருள் பேரருளாகியிருக்கும்.

✡ நாடு உலகப்போருக்குமுன் விடுதலையடைந்திருக்கும்.

✡ போர் தடுக்கப்பட்டிருக்கும்.

✡ வங்காளப்பஞ்சம், ஜாதிக்கலவரம் எழுந்திருக்காது.

✡ ஆனால் ஜப்பானிய ஏகாதிபத்தியம் எழுவது தடுக்கப்பட்டது.



✡ சோவியத் ஏகாதிபத்தியம் எழுவதும், மூன்றாம் போரும் பகவானால் தடுக்கப்பட்டன.

✡ மூன்றாம் போரைத் தடுக்க ஆரோவில் சின்னமாக அமைந்ததுபோல் இரண்டாம் போரைத் தடுக்க ஆசிரமம் சின்னமாக அமையவில்லை. ஹிட்லர் ஜெயிக்க சாதகர்கள் பிரார்த்தனை செய்தார்கள். இறைவன் வரும் தருணத்தை இவ்வுலகம் அறியவில்லைஎன்பது அதனால் நமக்கு அறிவிக்கப்பட்டது.

மறுப்பது சரியில்லை. ஏற்பதை நன்றியுடன் ஏற்கும் பக்குவமில்லை. எண்ணம் ஓடுவதைத் தடை செய்ய முடியவில்லை:

✡ பிரெஞ்சுக்காரர் நம்பிக்கையாலும், நல்லெண்ணத்தாலும் கமிஷனில் ஒரு பகுதியை முன்கூட்டி கொடுக்க முன்வருகிறார். இது வாழ்க்கையில் கண்டறியாதது. இல்லையெனக் கூற முடியாது. அரிபொருளாகக் காணலாம். அன்பர்கள் வாழ்வில் இது சகஜம். ஏராளமாகக் காணலாம்.

  ❀ இதைப் பெற்றவர் 'காணவில்லை'என்பதுதான் நாம் பெரும்பாலும் அறிந்தது.

  ❀ இந்தக் குடும்பத்தில் நடந்தவை எல்லா அன்பர்கட்கும் நடந்தவை.

  ❀ Verdict தீர்ப்பு என்ற கதையில் 3 கோடி நஷ்ட ஈடு கேட்டவருக்கு கோர்ட் மேலும் கொடுக்கப் பிரியப்பட்டது அதுபோன்ற நிகழ்ச்சி ஆகும்.

✡ "வேலை செய்துவிட்டு பணம் பெற்றுக்கொள்கிறேன்"என்று கூறுவது பெருந்தன்மை. ஆனால் மனித வாழ்விற்குரிய பெருந்தன்மை. வரும் கமிஷன் பணமானால் அப்படிக் கூறுவது உயர்ந்தது. வருவது அருள், பணத்தின் ரூபமாக வருகிறது. அருளைப் பணமாகக் கருதுவது அருளை மறுப்பதாகும், குறைப்பதாகும். மறுப்பது சரியில்லைஎனத் தெரிகிறது.

✡ ஏற்பதை நன்றியுடன் ஏற்கும் பக்குவமில்லைஎன்றால் என்ன செய்வது? வந்தது போய்விடுமே. நன்றியுடன் ஏற்க முடியவில்லை என்ற அறிவே ஆத்ம பலன் தரவல்லது. இந்த நிலைக்கு இதுவே போதும்.

❀ நன்றி அவசியம்என்பது அறிவு.

❀ இதுவரை அந்த அறிவு நமக்கு உதயமாகவில்லை.

❀ இப்பொழுது உதயமாகியிருப்பது அதிர்ஷ்டம்.

❀ நன்றிஎன்றால் என்னஎன்று அன்னை எழுதியிருப்பதை அறிதல் நன்று.

❀ எல்லா விஷயங்களைப்போல நன்றிக்கு நான்கு நிலைகள் உள்ளன. மனம் அறியும் நன்றி, பிராணன் உணரும் நன்றி, உடல் புல்லரிக்கும் நன்றி.

✰ ஆத்மா இரண்டறக்கலந்து தன்னை மறப்பது ஆன்மீக நன்றி.

✡ பக்குவமில்லாத எண்ணம் ஓடும். அதைத் தடை செய்ய முடியாது. தடை செய்ய முடியாவிட்டாலும், ஓடும் எண்ணத்துடன் கலந்து கொள்ளாவிட்டால், எண்ணம் நம்மை பாதிக்காது.

❀ மௌனம் நல்லது. எண்ணம் மனத்திலிருப்பது நல்லதன்று.

❀ ஓடும் எண்ணம் நம்மை சிந்திக்க வைக்கும்.

❀ எண்ணம் ஓடும்பொழுது விலகிநின்று சிந்திக்காமலிருப்பது தவமுயற்சி.

❀ அது நாளடைவில் மௌனத்திற்கு வழிசெய்யும்.

❀ முடியாதபொழுது முடியவில்லைஎனப் புரிவது அறிவு.

❀ முடியாதபொழுதும் எண்ணத்தோடு கலக்கக்கூடாதுஎன அறிவது நல்லது.

❀ முடியாதபொழுதும் முடியும் என்றதுபோல் பலன் பெறுவது முடியும்.

❀ செயல் முடியவில்லைஎன்றாலும் எண்ணம் தன்போக்கால் செயல் முடியும்என்ற நிலைபோல் நடந்துகொள்ளமுடியும்.



பேச்சு மாறியது. ஆனால் எல்லோர் எண்ணமும் நிறைந்தது. ‘எலிசபெத் பெம்பர்லியைக் கண்டு பிரமித்ததுபோன்ற உணர்வு எழுகிறது’எனத் தாயார் நினைத்ததைப் பார்ட்னர் கூறினார்:

✡ 'இறைவன்வரும்தருணம் இது'என்ற கட்டுரையில் பகவான் மேல் லோகநிலையை எழுதியுள்ளார்.

❀ அரிபொருளாக எழும்தருணம் இதுஎன பகவான் கூறுகிறார்.

❀ அவர் பூவுலகைக் கூறவில்லை. மோட்ச லோகத்தைத் தன்னுள் கொண்ட மேலுலகைக் கூறுகிறார்.

❀ ஆயிரம்காலம் செய்தவேலை கூடிவரும் நேரம், 'இறைவன்வரும் தருணம்'.

❀ பல மாதங்கள் பயிரிட்டு மகசூல் வருகிறது. அது அறுவடைக் காலம்.

❀ ஒரு குடும்பம் 10, 20 ஆண்டுகளாக முயன்றது கூடிவரும் நேரம் திருமணம், மகன் வேலைக்குப் போவது.

❀ ஆயுள்முழுவதும் செய்த சேவையை நாடு ஏற்று ராஜாஜியை கவர்னர் ஜெனரலாக்கியநேரம் அது போன்றது.

❀ 1910 வரை யோகம் செய்து சூட்சுமத்தில் பெற்ற சுதந்திரத்தைப் பெறும்நேரம் 1942இல் கிரிப்ஸ் மிஷனாக வந்தது. அது தவறு செய்யக்கூடிய நேரமில்லை.

❀ 30 ஆண்டு சர்வீஸ் முடிந்து ஓய்வு பெற்றபின் வைஸ்-சான்ஸலர் பதவி எல்லோருக்கும் தேடி வருவதில்லை. வந்தால் "நாளைக்கு வருகிறேன்"என்று கூறுவது தரித்திரம்.

❀ கமிஷனில் பகுதியை முன்கூட்டி அளிக்க முன்வரும் நேரம் தாயாருடையதவம் 10, 12 ஆண்டுகளுக்குப்பின் பலித்த நேரம்.

✰ எல்லோர் மனமும் நிறைந்தது.

- ❀ அன்னையை அறிந்தவுடன் இந்த நேரம் நம்மை நாடி வருவதைக் காணாதவரில்லை. கண்டவர் உணருவதில்லை. பலனை மட்டும் கண்டு பவித்திரமான சூழலைக் காணமறுப்பதே அனைவரும் செய்வது.
- ❀ எலிசபெத்திற்கு டார்சி வந்ததைவிடக் குறைவாக அன்பர்கள் பெற்றதில்லை. தன்னைத் திருமணம் செய்ய அவன் அவளைக் கேட்டதை அவள் மறுத்தபின் அவர்கள் வெவ்வேறு பாதையில் போயிருக்கலாம். அப்படிப் போயிருந்தால், எலிசபெத் தாம் பெற்றதை, பெற்று இழந்ததை, அறிந்திருக்கமாட்டாள். அன்பர் அன்னையிடம் அப்படியே பழகுகின்றனர். எலிசபெத் லேடி காதரின் வீட்டிற்குப் போயிருக்காவிட்டால், டார்சி தம்மீது விருப்பம் கொண்டதையே அறிந்திருக்கமாட்டாள். நம்மை, இந்த நேரம் அருள் அதிர்ஷ்டமாகச் சூழ்ந்திருப்பதை நெதர் பீல்ட் டான்ஸில் எலிசபெத் டார்சியின் விருப்பத்தை அறியாததுபோல் நாம் அறியவில்லை. நமக்குத் தெரியவில்லைஎன்றே நாம் அறியவில்லை. நமக்குத் தெரியவில்லைஎன்று தெரிவது கண் விழிப்பதாகும்.

ஏதாவது ஓர் எண்ணத்தையாவது முறையாகப் பூரணமாகச் சமர்ப்பணம் செய்ய வேண்டும்என்று மனைவி நினைத்தார். அது முகத்தில் ஒரு பொறியாகப் பொன்னொளியாகத் தோன்றியது. எவரும் கவனிக்கவில்லை. அது பார்ட்னர் புருவத்தில் தெரிந்ததை மனைவி கவனித்தார். நெஞ்சு நிறைவதுபோல் சூழல் பெருநிறைவு பெற்றது:

- ✡ ஓர் எண்ணத்தைப் பூரணமாகச் சமர்ப்பணம் செய்வது 1 நிமிஷம் காற்றில் பறப்பதுபோலாகும். சமர்ப்பணம் நம் உலகைச் சார்ந்ததில்லை. ஒரு நிமிஷம் மோட்சத்திற்குப் போகவேண்டும் என்பது போன்றது.
- ✡ அது பெரிய முயற்சி. முடிவான முயற்சி.



- ✡ சமர்ப்பணம் முயற்சியைப் பூரணமாகக் கைவிடும் முயற்சி.
- ✡ அந்த எண்ணம் மனதில் தோன்றியவுடன் தாயார் முகத்தில் அது ஒளிப் பொறியாகத் தெரிந்தது. அது சத்தியஜீவியம் ஒரு க்ஷணம் உள்ளே நுழைந்தது போலாகும்.
- ✡ எவரும் அதைக் கவனிக்கவில்லைஎன்றால் அது எவர் கண்ணுக்கும் தெரியாது. ஒருவருடைய நல்ல குணமோ, படிப்போ முகத்தில் அனைவருக்கும் தெரியாது. நல்ல குணம், படிப்புள்ளவருக்கு அது தெரியும். எவரிடம் அவ்வொளி இருக்கிறதோ அவருக்குத் தெரியும். கருவியில்லாதவர்க்குக் கண்ணிருக்காது.
- ✡ பார்ட்னர் தம்பண்பால் அவ்வொளியைப் பெற்றார். அறிவுக்குரிய இடம் புருவமையம். அங்கு அவ்வொளி எழுந்தது. அது தாயாருக்குத் தெரிந்தது.
  - ❀ தாயாருக்கு ஒளியிருப்பதால் பார்ட்னர்ஒளி அவருக்குத் தெரிகிறது.
  - ❀ பார்ட்னருக்கு ஒளியிருந்தாலும் தாயாருடையஒளி தெரியும் அளவுக்கில்லை.
  - ❀ புருவமையம் அறிவுக்குரியது.
  - ❀ முகம், மனம், உணர்வு இரண்டையும் சேர்த்தது.
  - ❀ தாயார் முகத்தில் தெரிவது அவர் மனமும், உணர்வும் மலர்ந்ததைக் காட்டுகிறது.
- ✡ சூழல் கனத்தது, நிறைவு பெற்றது. அனைவரும் அதை உணருகின்-றனர்.
- ✡ சூழல் பொது.
- ✡ ஒளி அறிவுக்கு மட்டும் வெளிப்படுவது.
- ✡ மௌனம் மனத்திற்கு மட்டும் உரியது - அறிவு மனத்தின் பகுதி.
- ✡ சந்தோஷம் உணர்வுக்குரியது.
- ✡ அமைதி ஜீவனுக்குரியது.

✡ நன்றி உடலுக்குரியது.

✡ காரியம் கூடிவருவது அனைத்தும் இணைந்த ஜீவனுக்குரியது.

சற்று நேரம் கழித்து சூழல் மாறி அனைவரும் பேச ஆரம்பித்தனர்:

✡ பரவசப்பட்டால் பேச முடியாது.

✡ பரவசம்என்றால் தன்நிலைஇழந்து பிறருடன் இணைவது. இணைந்த பின் நம்எண்ணமும் அவர்எண்ணமும் கலந்துவிடுவதால், பேச எதுவுமில்லை.

✡ இங்கு பரவசம்என்பது இறைவனுடன் - அன்னையுடன் - இரண்டறக் கலப்பது. இறைவனுள் அனைவரும் இருப்பதால் அனைவருடைய எண்ணத்துடன் நம்எண்ணம் கலந்துவிடுகிறது.

✡ இறைவன்என்பவன் inner Divine உள்ளுறை இறைவன்.

✡ பரமாத்மாஎன்பது வெளியேயுள்ளது. அது உள்ளேயும் உள்ளது.

✡ உள்ளே, வெளியே எனக் காண்பது மனம்.

✡ உள்ளும், புறமும் ஒன்றாகக் காண்பது சத்தியஜீவியம்.

✡ சூழல் மாறி அனைவரும் பேச ஆரம்பித்தனர். சூழல் உள்ளபொழுது சூழலின்மௌனம் நம்மை ஆட்கொள்ளும், பேச இயலாது.

✡ புதியசூழல் சற்று நேரத்தில் மாறும்.

✡ சூழல் மாறாவிட்டால், தாயார் நிரந்தரமாகப் பேச்சை இழப்பார்.

✡ பேச ஆரம்பித்தால் சூழல் விலகும்.

✡ பேச நினைத்தால் சூழல் கலையும்.

✡ பரவசப்பட்டவருக்குச் சூழல் வந்ததும், பேச்சிழந்ததும், அமைதி கலைந்து பேச ஆரம்பித்ததும் அப்பொழுது தெரியாது.

✡ பிறகும் அந்நினைவுள்ளவரை தெரியாது.



✡ நினைவகன்றபின், நினைவின்நிழலும் அகன்றபின் நடந்தது நினைவுக்கு வரும்.

✡ நினைவு insincerity உண்மையன்றுஎன்கிறார் அன்னை.

✡ நினைவு கடந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் இணைப்பது.

✡ கடந்தகாலம், நிகழ்காலத்தைப் பிரித்தது மனம்.

✡ பிரிந்தவற்றைச் சேர்ப்பது நினைவு.

✡ நினைவுள்ளவரை காலம் இரண்டாகப் பிரிந்துள்ளது.

✡ நினைவழிந்தால் நாம் காலத்தைக் கடந்தவராவோம்.

✡ அழிந்தநினைவு மீண்டும் வரும்பொழுது நினைவுக்கு சக்தி அதிகம்.

✡ அந்நினைவு, நினைத்தால் நடக்கும்.

✡ அந்த சக்தியைக் கோபம் பயன்படுத்தினால் சாபம் எழும்.

✡ இவற்றைக்காண ஆன்மீகத் தெளிவு தேவை.

✡ சத்தியஜீவியம், ஆன்மாவைக் கடந்தது.

✡ காலத்தைக் கடந்த ஆன்மா, காலத்துள் கொண்டு வருவது சத்திய ஜீவியம்.

“நாம் எண்ணத்தை விஷயத்திலிருந்து பிரித்துவிடுகிறோம்”. அதுவே நாம் முதலில் செய்வது:

✡ கணவன் மனைவியை மனைவியாக மட்டும் காண்கிறான். "நானும் ஒரு மனுஷியில்லையா. எனக்குத் தேவைகள், உணர்ச்சிகள், உரிமைகள்என இருக்குமல்லவா"என மனைவி கேட்பது கணவன் மனத்தைத் தொடாது. மனுஷிஎன்ற முழுமையில் ஒரு பகுதியான மனைவியை மட்டும் கணவன் பார்ப்பதால் எழும் பிரச்சினைகள் ஏராளம்.

- ✡ Generation-gap தலைமுறை மாறுவதால் ஏற்படும் பிரச்சினை என்பதென்ன? தகப்பனார் அவர் கல்லூரி நாட்களில் கற்றவற்றை நல்லதுஎன 50ஆம் வயதில் பின்பற்றுகிறார். மகன் தன் கல்லூரி நாட்களில் கற்றவற்றைப் பின்பற்றுவான்என அவர்கள் நினைக்க முடிவதில்லை. மகன் முழுமனிதன். அவன் கற்பவை, சொந்தமாகக் கற்பவை. அப்படியே தாமும் கற்றோம்என்று தகப்பனாருக்குத் தோன்றுவதில்லை. மகன்என்ற பகுதியை மட்டும் அவரால் காண முடிகிறது. மகனால் தகப்பனாரின் முழுமையைக் காணமுடிவதில்லை.
  - ❀ இரு தலைமுறைகளும் சேர்ந்ததே முழுமை.
  - ❀ ஒவ்வொருவரும் ஒரு பகுதியைப் பார்க்கின்றனர்.
  - ❀ பகுதிகள் முரண்பாடாகின்றன.
  - ❀ இதைப் பகுதி எனலாம், சுயநலம் எனலாம்.
- ✡ மனம் பகுக்க ஏற்பட்ட கருவி.
- ✡ கணிதம் படிக்கும் மாணவன் வரலாறு படிப்பதில்லை. கணிதத்தை ஞானத்தின் பகுதியாகப் படிப்பதில்லை. கணிதமே முடிவு, முழுமை எனப் படிக்கிறான். வரலாறு படிப்பவன் வரலாற்றை ஞானத்தின் பகுதியாகக் கருதவில்லை. வரலாறே படிப்பு, முழுமைஎன நினைப்பதால் படிப்பு முழுமை பெறுவதில்லை. உலகில் முழுமையான ஞானம்என இதுவரை ஏற்படவில்லை. அவரவர் தத்தம் பகுதியை முழுமையாக உணர்வது, மனம் ஞானத்தைப் பகுதிகளாகப் பிரிப்பதால்.
- ✡ குடும்பத்திலும் முழுமையை அறிய எவரும் முயல்வதில்லை. தகப்பனுக்கு சம்பாத்தியம், தாயாருக்கு வீட்டு நிர்வாகம், பிள்ளைக்கு அவரவர் வாழ்வுஎனப் பிரிந்து போகிறது. எல்லாம் சேர்ந்த முழுமையே குடும்பம் என்றத் தெளிவில்லை. அத் தெளிவைப் பெற நாம் முனைவதில்லை. இன்று அப்படியொரு குடும்பம் உற்பத்தியாகவில்லை. அப்படி உற்பத்தி செய்தால் அதற்கு யார் மையம்?



  - ❀ அக்குடும்பத்தில் அனைவரும் மையம்என்றால் புரியாது. அனைவரும் மையமான குடும்பத்தை உற்பத்தி செய்வது சத்திய ஜீவியத்தை வாழ்வில் கொண்டு வருவதாகும்.
  - ❀ அனைவரும் மையமான ஸ்தாபனம் எப்படியிருக்கும்என மனத்தால் கற்பனை செய்ய முடியாது. அதன் அம்சங்கள் இன்று ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.
  - ❀ மனத்தின் முதற்கடமை ஸ்தாபனத்திலிருந்து மனிதர்களைப் பிரிப்பது, மனிதர்களிடமிருந்து வேலைகளைப் - கடமை - பிரிப்பது என பிரிவினை மனத்தின் கடமைஎன்ற கருத்தை The Life Divineஇல் மேற்சொன்ன கருத்துமூலம் பகவான் எழுதியுள்ளார்.

‘அவனே ஆட்டம், அவனே ஆட்டக்காரன், அவனே அரங்கம்’ என்று ஓர் இடத்தில் வருகிறது:

- ✡ Himself the play, He is the player, He is the playground என்பது ஸ்ரீ அரவிந்தம். இதுவரை மனம் - ரிஷிகள் மனம் - இவற்றைத் தனித்தனியாகப் பிரித்துப் பார்த்தது. இனி இவற்றை ஒன்றாகப் பார்க்க வேண்டும். அது சத்தியஜீவியம்.
- ✡ Overmind தெய்வீக லோகம் பிரிக்கிறது. பிரிவினை - துச்சேன - infinitesimal அணுவரை போகும். பிரிவினை முடிந்தபின் பரிணாமத்தால் அவை சேர்கின்றன. பரிணாமமில்லாமல் அவை சேரும்பொழுது aggregated atoms that become the molecule அணு உற்பத்தியாகிறது. அணுக்கள் சேர்ந்தவை அகந்தையாகின்றன. அணுவைப் பிரித்தால் அணுவற்ற ஜீவியமாகி சத்தியஜீவிய நிலையை அடைகின்றன unatomic extension of substance that is Supermind.
- ✡ வீடு, நிர்வாகம், சமையல், குழந்தைவளர்ப்பு, பொறுப்பு, சம்பாத்தியம், கடைசாமான் வாங்குவது, பாதுகாப்பு protection, security, defence,

offence ஆணுக்கும் பெண்ணுக்கும் பிரிந்து, பெண் மென்மையாகவும், ஆண் கம்பீரமான வலிமையுடனும் வாழ்கிறான். சிருஷ்டிக்கு அங்கு மாறுபாடில்லை.

- ❀ எனக்குக் கணக்குவழக்கு வாராது. அது எனக்கு வேண்டாம்.
- ❀ சமையலுக்கும் எனக்கும் ஒத்து வாராது. நான் சமைப்பதை நானே சாப்பிட முடியாது.
- ❀ குழந்தையை என்னிடம் விடு. நான் அழாமல் பார்த்துக் கொள்கிறேன்.
- ❀ உன்னால் பணத்தைப் பாதுகாக்க முடியாது.
- ❀ ஆண்பிள்ளையல்லவா?
- ❀ அப்பா சொல்லிக்கொடுத்தால்தானே பாடம் வரும்.
- ❀ இந்த இரசீதுகளெல்லாம் முக்கியம். நானே வைத்துக்கொள்கிறேன்.
- ❀ இரசீதை file செய்து வைக்கலாம். இருப்பது 20 பேப்பர்தானே. அப்படியே இருந்தால் போதும். தொலைக்காமல் வைத்துக் கொள்வது அவசியம்.
- ❀ எங்கிருந்தாலும் பார்வை குழந்தைமேல் இருக்கவேண்டும்.
- ❀ அடுத்த வீட்டில் fanஐ நிறுத்தமாட்டார்கள்.
- ❀ வயது என ஒன்றுண்டல்லவா?
- ❀ அனுபவம் வேண்டாமா?
- ❀ பரம்பரையிருக்கிறதல்லவா!
- ❀ ஜாதி புத்தி எங்கே போயிற்று?
- ❀ தண்ணீர் சாப்பிடாவிட்டால் வயிறு கல்லாக இருக்கும்.
- ❀ Emotional people are constipated உணர்ச்சிமயமானவர்க்கு மலச்சிக்கலுண்டு.
- ❀ கட்டைவிரல் வளையும்.



- ❀ தகப்பனார் farm writer ஆனால் மகன் executive engineerஆக ரிடையராவான்; CE ஆகமாட்டான்.
- ❀ தகப்பனார் ரோடுமேஸ்திரியானால் மகன் வைஸ்-சான்ஸ்லராக மாட்டான். பேராசிரியராகவே ஓய்வு பெறுவான்.
- ❀ VRS வேண்டாம் என்றாலும், குறுகிய மனம் அதிலிருந்து தப்ப முடியாது.
- ❀ இன்று சாராயம் பலன்தருகிறதுஎனில் அன்று பலன் தந்தது பிறரை ருசிப்படுத்தியது.
- ❀ ஒரு தலைமுறையில் லஞ்சம் வாங்கினால், அடுத்த முறையில் அது நாட்டுத் தலைவனாக வரத் தடையாகும்.
- ❀ மணியக்காரர் மகன் ஜனாதிபதியாக வர அறிவு தடை.
- ❀ ஸ்ரீ அரவிந்தர் சக்தி உலகப்போரை வென்றாலும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தன் பெருமையை இழப்பதைத் தடுக்க முடியாது.
- ❀ க்ஷத்திரியனே அரசன் என்றாலும் சேர, சோழ, பாண்டியர் வெள்ளாழர்கள்.
- ❀ 800 ஆண்டுகட்குமுன் ஹரிஜனங்கள் முஸ்லீமானார்கள். விரும்பித் தழுவினார்கள். இன்று நாடு பிரிய அவர்கள் காரணமானார்கள்.
- ❀ கர்ம காண்டம், ஞான காண்டம் சாஸ்திரி, ரிஷியாகப் பிரித்தது இன்றுவரை நீடிக்கிறது.

**எண்ணமே செயல், செயலே ஆனந்தம், ஆனந்தமே எண்ணம்:**

- ✡ ஒளியும் வெப்பமும் பிரிக்க முடியாதவை. எட்ட இருந்தால் ஒளி தெரிகிறது. வெப்பத்தை உணர்வதில்லை.
- ✡ விளையாடுபவனுக்கு விளையாட்டு, ஸ்கோர், பிரபலம் அனைத்தும் ஒன்றே. பிரித்துப் பார்க்கலாம். இணைத்தும் பார்க்கலாம்.

✡ கொடுப்பதும், பெறுவதும் ஒன்றே. கொடுக்காமல் பெற முடியாது. நாம் கொடுக்காமல் பெறும்வழியை நாடுகிறோம்.

✡ ஆசிரியர் கொடுத்துப் பெறுவது அவசியம்.

✡ வியாபாரி பெறுவதற்காகக் கொடுக்கிறான்.

✡ நண்பர்கள் கொடுப்பதற்காகக் கொடுக்கிறார்கள். அதனால் பெறுகி-றார்கள்.

✡ கொடுக்காமல் பெறவிரும்பும் நட்பு, இளமை மாறியபின், சந்தர்ப்பம் மாறியபின் மாறிவிடும்.

✡ பயிருக்கு உரம் கொடுத்தால் மகசூல் அதிகமாகும்.

✡ பெறுவது குறைவானால் மரம் காய்ச்சலில் உரமாக வளரும்.

✡ கொடுப்பது பெறுவதைப்பொருத்தது. பலாப்பழம் 40" மழையில் சுவையுடையதாக இருக்கும். 100" மழையில் சக்கைப் பழமாகும்.

✡ சமையலில் திறமை, கடமை, இனிமை, பிரியம், பொறுப்பு கலந்துள்ளது. சேர்த்துப் பார்க்கலாம். பிரித்தும் பார்க்கலாம்.

✡ கர்ம காண்டமும், ஞான காண்டமும் பிரியாது. பிரித்தால், கூடாது. ஜீவனற்றுப் போகும்.

ஜீவனற்ற வேத பாராயணமும் போகும் உயிரைத் தடுக்கும்.

✡ எண்ணம் செயலாகும்பொழுது திறமை உயர்ந்து வேலையில் சிறப்பு எழுகிறது.

✡ செயலே ஆனந்தமாகும்பொழுது தன்னை மறந்த சிருஷ்டி வருகிறது.

✡ ஆனந்தமே எண்ணமாகும்பொழுது மேதைமை பிறக்கிறது. புது சாஸ்திரம் பிறக்கிறது.

✡ எண்ணமும், செயலும், ஆனந்தமும் இணையும்பொழுது பிறப்பது சத்தியஜீவியம்.

✡ Let thy will be done, not my will என்பதைச் சொல்லும் நிலைகள் பல.



❀ அடுத்த நிலையில் not my will தேவைப்படாது. Thy will மட்டும் நிற்கும்.

❀ மூன்றாம் நிலையில் Will இருக்காது. Existence மட்டும் இருக்கும். I am eternally yours என்ற நிலை ஏற்படும்.

❀ முதல் நிலை நிலைக்கும்பொழுது, எண்ணம் கட்டுப்படுவது தெரியும்.

பிறகு நம் உலகம் கட்டுப்படும்.

முடிவாக உலகம் கட்டுப்படும்.

அந்த நிலையில் மந்தாரமலை நகரும்.

அந்த முடிவு அடுத்த நிலைக்கு ஆரம்பம்.

Substance, consciousness என்ற நிலைகள் மனம், உணர்வு, உடல் வழியாக வளர்ந்து மாறுவது தெரியும்.

1 முதல் 9 நிலைகளை அதனுள் காணலாம். 9 நிலை 18ஆக (Substance, consciousness) பிரிந்து, மாறும்.

நிலை மாறினால் பலம் வளரும்.

வளரும் பலம் பலனானால் திறன் உயரும்.

முடிவான நிலையில் (1039 page) ஜடம் நகரும்; ஆன்மா ஜடத்தை நகர்த்தும்.

தியோன் மனைவியின்காலில் செருப்புவந்து தானே மாட்டிக் கொள்ளும். அதுவும் vital powerஆக இருக்கலாம்; spiritual powerஆக இருக்கலாம்.

சொந்தமாக discrimination இல்லாமல் புரிவது இயலாது.

சேர்வது முழுமை. பிரிவது மனத்தின் ஆட்சி.

பார்ட்னர் - மூன்றும் ஒன்றாக இருப்பது சைத்தியப்புருஷன், ஸ்ரீ அரவிந்தம்;

**மனைவி - அது முழுமை. ஒரு தரமாவது அனுபவிக்க வேண்டும்:**

- ✡ 'நான் அறியாமற் கேட்டதைவிட அன்னை அதிகமாகக் கொடுத்தார்' என்பது 'ஒளிப்பிழம்பான அன்னைக்குக் கீதாஞ்சலி' என்ற கட்டுரையில் வரும் சொல்.
- ✡ முதல்முறை பட்டிக்காட்டைவிட்டு நகரத்திற்குப் போனவன் நகரத்தின் ஆச்சரியமான சிறப்புகளில் ஏதாவது ஒன்றை அனுபவிக்காமல் இருக்கமாட்டான். அத்தனையும் அனுபவிப்பவரும் உண்டு.
  - ❀ அதன்பின் நகரத்திற்கே வந்துதங்க அவனுக்கு அனுமதியுண்டு, அழைப்புண்டு.
  - ❀ பட்டிக்காட்டுக்குத் திரும்பும் பழக்கம் பெரியது.
  - ❀ அன்னையை அறிந்த முதலில் - புதிதில் - அன்னையின் ஸ்பர்சம் படாதவரில்லை.
  - ❀ அதை அனுபவித்தபின், அவனே தம்மிடம் விரும்பி வரும்வரை அன்னை காத்திருக்கிறார்.
  - ❀ முதற் ஸ்பர்சம் முழுமையை உணர்த்தும்.
  - ❀ அது முழுமையின் முழுமையல்ல; முதல் அனுபவம்.
  - ❀ சைத்தியப்புருஷனிருப்பது அடிமனம்.
  - ❀ அடிமனம்சேர உள்மனத்தைக் கடக்க வேண்டும்.
  - ❀ உள்மனம் போக காலத்தைக் கடக்க வேண்டும்.
  - ❀ அகந்தையை அழிக்காமல் உள்மனம் போகலாம்.
  - ❀ அகந்தை அழியாமல் அடிமனம் போகமுடியாது.
  - ❀ மேல்மனப்பிடிப்பு அதிகம். பூரணமானது.
  - ❀ மீன் தண்ணீரைவிட்டுத் தானே வருமா?
    மீன் தண்ணீரிலிருப்பதைப்போல் நாம் மேல்மனத்தில் இருக்கிறோம்.
  - ❀ நினைவுஅழிவது உள்மனத்தில்.



- ❀ அழிந்தநினைவு மீண்டும் அடிமனத்தில் எழும்.
- ❀ அது மேதைக்குரிய மனம்.
- ❀ உள்மனம் மனத்தின் காலத்தைக் கடந்த நிலையைத் தொட்டு நிற்பது.
- ❀ உள்மனத்தில் சிறியது பெரியதாகலாம். ஆகவேண்டிய அவசியம் இல்லை. நாம் பிரியப்படும்பொழுது பெரியதாகும்.
- ❀ சிறியது பெரியதாகாமல் அடிமனத்துள் நுழைய முடியாது.
- ❀ காலத்தைக் கடந்த நிலையில் அடிமனம் எட்டாது.
- ❀ காலத்துள் காலத்தைக் கடந்த நிலைக்குரிய மனம் அடிமனம்.
- ❀ அங்கு சிறியது பிரபஞ்சத்தின் அளவுக்குப் பெரியதாகும்.
- ❀ இத்தனையும் மனிதனுடைய இஷ்டத்திற்குட்பட்டது.
- ❀ மனிதன் விரும்புவது மனிதன் பெறுவது.
- ❀ விரும்புவது நம் நிலை. பெறுவது அருள்.
- ❀ சைத்தியப்புருஷன் அடிமனத்திற்குரியது. அடிமனத்திற்கு மட்டும் உரியது. மேல்மனத்தில் அது இல்லை. உள்மனத்திலும் அது இல்லை.

**மனைவி - சமர்ப்பணம் முழுமையாகும்பொழுதுள்ள உணர்வு அது:**

- ✡ நினைவிழந்து, நிலையிழந்து, உள்ளம் பூரித்து, உடல் கரைந்து, உள்ளிருந்து எழும் ஆத்மா, வெளியிலுள்ள ஆத்மாவுடன் நம்மை அறியாமல் கலக்கும் நிலை சமர்ப்பணம் முழுமையாகும் நேரம். அந்த நேரம் உணர்வுக்குரிய மனம் உள்ளதை அறிந்த நேரம்; உணர்வை இழந்த நேரம். சமர்ப்பணம் முழுமையாகும் நிலைக்கு உணர்வில்லை. நம்பழக்கப்படி உணர்வுஎன்கிறோம். அது சச்சிதானந்தம் பெறும் உணர்வு - ஆனந்தமெனப்படும்.

✡ பெரியது தன்னைச் சிறியதாக உணர்வது சரணாகதி.

✡ சிறியது பெரியதாகும் பாதை சரணாகதி.

✡ சரணாகதி மனிதனை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும்.

- ❀ மனம் வளர்ந்த நிலையில் சரணாகதி சத்தியஜீவியத்திற்குக் கொண்டு போகும்.
- ❀ உடல் நிலையிலுள்ளவன் சரணாகதியால் உணர்வு நிலையை அடைவான். அவனது சரணாகதி பூரணமானால் சத்திய ஜீவியத்தை அடைவான்.
- ❀ முயற்சி முடிந்த நிலை சரணாகதி.
- ❀ முயற்சி பலனற்றதுஎன்ற ஞானம் சரணாகதி.
- ❀ முயற்சி நம்முடையதன்று, இறைவனுடையது என்ற உணர்வு சரணாகதி.
- ❀ நம்மை மீறி இறைவன் நம்முள் செயல்படுவது நம் சரணாகதி.

✡ எந்த ஞானம், காரியம், ஆனந்தம் முழுமை பெறும்பொழுதும் சரணாகதியின் அம்சம் அங்கிருக்கும். அது அந்த அந்த மனிதனுடைய சுபாவத்தையும், சூழ்நிலையையும் பொருத்தது.

- ❀ இந்தியச் சுதந்திரத் தினத்தன்று காந்திஜி டெல்லியிலில்லை, பீகாரில் இருந்தார்.
- ❀ உலகப்போரை வென்ற சர்ச்சில் போர் முடியும்பொழுது பதவியை இழந்தார்.
- ❀ சத்தியஜீவிய சக்தி உலகுக்கு வந்தபொழுது பகவான் ஸ்ரீ அரவிந்தர் உயிருடனில்லை.
- ❀ இந்திய விவசாயியின் வாழ்வுக்கு ஜீவனூட்டிய இயக்கத்தை ஆரம்பித்து, வெற்றிகரமான சின்னத்தைச் செய்தவர், விழாக் கொண்டாடும்பொழுதில்லை.
- ❀ பசுமைப் புரட்சியின் வெற்றியின்பொழுது C. சுப்ரமணியம் உணவு இலாக்காவை விட்டுப் போய்விட்டார்.



- ❀ அன்னை நமக்கு எக்காரியத்தை முடித்துக் கொடுக்கும்பொழுதும் நாம் அவரை மறந்துவிடுகிறோம்.

✡ சமர்ப்பணம்என்பது எண்ணம், உணர்ச்சி, செயலைக் கடந்த நிலை.

- ❀ சொல்லுக்கு அப்பாற்பட்ட நிலை.
- ❀ Surrender is the POISE of the evolving soul in Man.
  வளரும் ஆன்மாவின் பிரம்மவண்ணம் சரணாகதி.
- ❀ உள்ளே சென்று மனத்தின் உயர்ந்த நிலைகளைக் (Spiritual Mind levels) காணலாம். சத்தியஜீவியத்தைக் காணலாம். பிரம்மத்தைக் காணலாம். பிரம்ம ஜனனத்தைக் காணும்நிலை சரணாகதி.

கணவர் - அப்படியென்றால் சமர்ப்பணத்திற்கும் எனக்கும் காத தூரம்:

✡ கணவர் உள்ள நிலையில் சமர்ப்பணம் காததூரம் என்பது உண்மை. காததூரத்தில் உள்ளது கைக்கெட்டும் நிலைக்கு வரும்என்பதும் உண்மை.

✡ 150 கோடி ரூபாய் கமிஷனுக்கும் கணவருக்கும் காததூரம் என்றால் அது உண்மை. அது கதவருகே வந்துவிட்டதுஎன்பதும் உண்மை.

✡ கமிஷன் கணவருக்குவர பார்ட்னரும், தாயாரும் பங்கேற்றனர். அவர்கள் இவருக்குச் செய்ததை கணவரே தமக்குச் செய்துகொண்டால் சமர்ப்பணம் பலிக்கும்.

✡ அல்பம், சொல்பம் என்பது மனிதச் சுபாவம். பெருந்தன்மையும், பரந்த மனப்பான்மையும் மனிதனுக்குண்டு.

- ❀ எதை மனிதன் தேர்ந்தெடுக்கிறான்என்பது எதை அவன் அடைகி- றான் என்பதை நிர்ணயிக்கும்.
- ❀ பெரியதைத் தேர்ந்தெடுத்தபின் சிறியது நிச்சயமாக அதனுள் தலை காட்டும்.

❀ பரந்த மனப்பான்மையால் செய்யும் காரியங்களில் அல்பத்தனம் சிறிது வெளிப்பட்டாலும், பலன் அல்பத்திற்கே வரும். பரந்த மனப்பான்மைக்கு வாராது.

❀ கணவர் அந்த நிலையிலில்லை.

❀ தாம் முழுவதும் அல்பமாக இருக்கும்பொழுது மனைவியின் பரந்த மனப்பான்மை தமக்குப் பலன்தர வேண்டும்என்பது கணவர் மனநிலை.

❀ கணவருக்கு உயர்ந்ததை ஏற்க மனமேயில்லைஎன்பது மட்டு-மன்று,

❀ மனைவி தமக்கு அடங்கியிருப்பதால் அவளைக் கட்டாயப்படுத்தி தாம் பலன்பெற வேண்டும்என்பது அவர் போக்கு.

அதுவே மனிதனுடைய போக்கு.

மனைவிக்கு அதிகாரமில்லை.

அதனால் அவளைக் கட்டாயப்படுத்தலாம்.

மனைவியால் மற்றவர்களை அசைக்க முடியாது.

கணவர் அன்பராக இருந்து மனைவி நம்பிக்கையற்றவரானால் கணவன் மனைவியிடம் பலன் தருமாறு கட்டாயப்படுத்த முடியுமா?

இப்பலன் கட்டாயத்தால் வருவதன்று.

✡ காததூரம் என்றசொல் 'நான் என்போக்கை மாற்றிக்கொள்ள மாட்டேன்'என்று ஒலிக்கிறது.

✡ யோகத்திலோ, தத்துவத்திலோ, நடைமுறையிலோ 'காததூரம்' இல்லை.

✡ 'காததூரம்' மனத்தில் உள்ளது.

✡ மனமே மனிதமையம்.

✡ மனம் விரும்பினால் எதுவும் நடக்கும்.



மனைவி - பக்தி, நம்பிக்கையிருந்தால் ஒரு செயலில் காணலாம். அதைக் காணும் நேரம் நமக்கு இறைவன் வரும் தருணம். அது இறைவன் வரும் தருணமில்லை. நம் வாழ்வின் எல்லைக்குட்பட்ட தருணமிது:

✡ பச்சைக்கண்ணாடி போட்டுக்கொண்டு உலகைக் கண்டால் உலகம் பச்சையாக இருக்கிறதுஎன்பது எளிய உதாரணம். தமிழ்நாட்டுப் பழமொழி மஞ்சள்காமாலைகண்ணுக்கு உலகம் மஞ்சள்என்பது பழைய சொல். அது பிரம்மத்திற்கு முழுவதும் பொருந்தும்.

❀ உலகம் பிரம்மம், நாமும் பிரம்மம், சர்வம் பிரம்மம்.

❀ காட்டிலிருப்பவனுக்கு நெஞ்சுக்குள் உள்ள பிரம்மம் தெரியவில்லை. உடல் தெரிகிறது. உடல் ஜடம். உயிர்பெற்ற ஜடம். அவன் பிரம்மத்தை மோகினியாகக் காண்கிறான்.

எந்தக் கருவிமூலம் காண்கிறோமோ அதற்குரிய காட்சி தெரிகிறது.

❀ கிராமத்திலுள்ளவன் உயிரில் வாழ்பவன். அவனுக்கு பிரம்மம் உண்டு. அவன் தன்னுள் உள்ள பிரம்மத்தை உயிர், பிராணன் என நினைக்கிறான். அவனுக்கு நெருப்பு மிதிக்கும் திரௌபதி அம்மனாக பிரம்மம் தெரிகிறது.

❀ ரிஷி மனத்தால் பிரம்மத்தைக் கண்டார். ரிஷிக்கு பிரம்மம் சச்சிதானந்தமாகக் காட்சியளிக்கிறது.

❀ ஸ்ரீ அரவிந்தர் பிரம்மத்தை சத்தியஜீவியத்தால் கண்டதால் அவருக்குப் பிரம்மம் முழுமையாக சச்சிதானந்தத்தைக் கடந்து தெரிகிறது.

சிருஷ்டி ஸ்ரீ அரவிந்தருக்கு பிரம்ம ஜனனமாகத் தெரிகிறது.

❀ இறைவன் வரும் தருணமானாலும், நாம் இறைவனை எந்த ரூபத்தில் காண்கிறோமோ அந்த அளவில் அவன் தெரிவான்.

நமக்கு உலகம்என்பது நாமறிந்த அளவுள்ள உலகம்.

நமக்கு இறைவன் வரும் தருணம் என்பது
நம் வாழ்வின் எல்லைக்கு உட்பட்ட உலகத்திற்குரிய தருணம்.

❀ **அருள்என்பது வாழ்விலுள்ளவனுக்கு அதிர்ஷ்டமாகும்.**

**கர்மத்தை நம்பாதவனுக்கு அருளுண்டு.**

**அருளை நம்பியவனுக்கு கர்மமில்லை.**

**கர்மம்என்பது நம்முடன் வாழ்பவர் நம்புவது - சமூகம் நம்புவது.**

**சமூகத்தை நம்பாதவனுக்கு கர்மம் அருளாகிறது.**

**தம் திறமைகளை நம்பாதவனுக்கு அருள் பேரருளாகிறது.**

**மனிதன் சமூகத்தின் கண்ணோடு பார்த்தால் கர்மம் வலுவாகத் தெரிகிறது.**

**சமூகத்தை விலக்கிப் பார்ப்பவனுக்குக் கர்மம் அருளாகத் தெரிகிறது; செயல்படுகிறது.**

**தம்மை - தம் திறமையை - விலக்கிப் பார்த்தால் அதே கர்மம் பேரருளாகத் தெரிகிறது.**

**பார்வை மாறினால் பலன் மாறும்.**

**பார்வையை நிர்ணயிப்பது பர்சனாலிட்டி.**

**பர்சனாலிட்டி மலர்ந்தால் பரமாத்மாவாகும்.**

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

காலத்தால் சமூகம் சாதிப்பதை, யோகம் ஆன்ம விழிப்பின் தன்னறிவால் சாதிக்கும். ஒரு சிறு அளவில் நாம் இதன்மூலம் காலத்தைக் கடக்கிறோம்.

***யோகம் காலத்தைக் கடக்கும்.***





**P.65 He thinks her thoughts, with her trouble his bosom heaves.**

**அவள் மனதால் அவன் சிந்திக்கிறான், அவள் கவலையால் அவன் நெஞ்சு குமுறுகிறது.**

- ✡ **அவனது தோற்றம் அவளெண்ணப்படி எழுந்த தோற்றம்.**
- ✡ **அவன் என்ற சித்திரத்தை அவள் எழுதினாள்.**
- ✡ **அவள் விருப்பமெனும் பாதையில் அவனை விரைந்து அவள் செலுத்துகிறாள்.**
- ✡ **அடிமையான குழவியாக அவனை ஆட்டுவிக்கிறாள்.**
- ✡ **யுகாந்தகால அடிமைக்குரிய முடிவான சுதந்திரம்.**
- ✡ **உலகைக் கடந்த அழியா வரம்.**
- ✡ **சூத்திரதாரியான அவளுக்கு ஆடும் பொம்மை அவன்.**
- ✡ **அழியும் உடலெனும் அவையெனும் அரங்கு.**
- ✡ **பிறப்பு இறப்பிடையே உழலும் வழிப்போக்கன்.**
- ✡ **நீர்க்குமிழியின் சாகாவரம் பெறும் கனவு.**
- ✡ **ஆட்சியை நோக்கி விரட்டுகிறாள். அவன் பெறும் அவள் அதிகாரம்.**
- ✡ **அவள் சட்டத்தின் சக்திக்கு உட்பட அவன் நீட்டிய கழுத்து.**
- ✡ **மண்ணுலக மனிதன் பெற்ற மகுடம்.**
- ✡ **அவளுக்கு அவன் அடங்கினான். அவள் குதர்க்கம் அவன் கொடுப்பினை.**
- ✡ **தனக்கு அவள் அடங்க அவன் செய்யும் யோசனை.**
- ✡ **நாழிகை ஒன்றானாலும் நடப்பதை அவள் நிர்ணயிக்கிறாள்.**
- ✡ **க்ஷணத்தில் எழும் வேகத்திற்கு அவளை உட்படுத்துகிறான்.**
- ✡ **அடிமையாக நடிக்கிறாள், அவன் ஆணைக்குப் பணிகிறாள்.**
- ✡ **அவனுக்காக அவள் பிறந்தாள், அவன் பயனுக்காக வாழ்கிறாள்.**
- ✡ **அவளை வென்றபின் தன்னடிமை வளர்ந்ததைக் காண்கிறான்.**
- ✡ **அவளை நம்பி வாழ்பவன் அவன், அவன் உடைமைகளெல்லாம் அவளுடையன.**

- ✡ **அவளின்றி அணுவும் அசையாது, அவன் வென்றபின்னும் ஆட்சி செய்வது அவளே.**
- ✡ **முடிவாக ஆத்மா அவனுக்கு நினைவு வருகிறது.**
- ✡ **தெய்வத்தின் திருமுகத்தை உள்ளே காண்கிறான்.**
- ✡ **மனித அச்சை தெய்வ ஜோதி தகர்த்தெறிகிறது.**
- ✡ **தன் சிகரத்தின் உச்சியை திரை விலக்கிக் காட்டுகிறாள், அங்கு அவள் அவன் தோழன்.**
- ✡ **அதுவரை அவள் கையில் அவன் சொக்கட்டான் காய்.**
- ✡ **தோற்றத்தில் தலைவன், நடைமுறையில் அவள் கருவி.**
- ✡ **அவள் எண்ணத்தால் அசையும் எழுதப்பட்ட சித்திரம்.**
- ✡ **கனவுலகில் அசையும் காற்றென செயல்படுகிறான்.**
- ✡ **விதியின் பிடியுள் விரும்பி நடக்கும் ஜீவனற்ற சிலை.**
- ✡ **அவள் சாட்டையால் நடத்தப்படும் தடுக்கி விழும் ஜீவன்.**
- ✡ **எண்ணம் தடுமாறுகிறது, காலமெனும் நிலத்தில் காளைஎனும் மனிதன்.**
- ✡ **தன் நினைவு என அவன் நினைப்பது அவள் பட்டறையில் தீட்டியது.**
- ✡ **இயற்கையின் இயல்பான சட்டத்தை ஏற்கும் மனிதன்.**

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜடம் தெய்வத்தை நாடும்பொழுது துன்பம்என்ற பாதை வழியே செல்கிறது. ஜடம் தெய்வத்தை ஏற்றுக்கொண்டு சத்திய ஜீவியத்தை நாடினால் துன்பத்தின் வழியே செல்லத் தேவை இல்லை. அதன் பாதை ஆனந்தமாகும். அதுவே அன்னையின் அவதார நோக்கம்.

அன்னையை ஏற்றுக்கொண்டால் துன்பத்தை ஆனந்தமாக மாற்றலாம்.

***துன்பம் இன்பமாகும் அன்னை முறை.***





# “டோக்கன் ஆக்ட்”

வி. ரமேஷ்குமார்

அழகான மாலை நேரம். மண்வாசனை மழை வரப்போவதை கட்டியம் கூறியது. மழைஎன்றாலே அருள்என்பதால் மேலே விழும் ஒவ்வொரு துளியிலும் அன்னையின் ஸ்பரிசம். எதிர்பார்த்துக்கொண்டு அண்ணாச்சி கடையில் பொருட்கள் வாங்கிக்கொண்டிருந்தேன். மீதி சில்லறையில் இரண்டு ரூபாய் நாணயங்களைப் புரட்டிப் பார்த்து பாக்கெட்டில் போட்டேன்.... ஆம்.... பகவானின் உருவம் பதித்த நாணயம் வந்த பிறகு இந்தப் பழக்கம் வந்துவிட்டது. ஒன்று கிடைத்தாலும் சிலிர்க்கும். பகவானே என்னைத் தேடி வந்ததுபோல ஒரு சந்தோஷம்.

அண்ணாச்சி சிரித்தார். “நீங்கள் அன்னை பக்தரா?” கல்லாவில் தேடி ஒரு நாணயம் எடுத்துத் தந்தார். அன்று ஆரம்பித்து – தியான மையம் செல்லும் வழியில் அவர் கடை இருப்பதால் – அடிக்கடி சந்தித்து பேசிக்கொண்டிருப்போம்.

ஒரு விடுமுறை நாள்.... அண்ணாச்சிக் கடையின் அருகில் சிறு குழந்தைகள் எல்லாம் ‘ஓ’ என கூச்சலிட்டு விளையாட, கடைக்குள் சிறு குழந்தை ஒன்று கண்ணை உருட்டி உருட்டி எல்லாவற்றையும் கேட்க... தெருவில் காதலர்கள் இழைந்துகொண்டு பைக்கில் செல்ல.... கார்களில் நெருக்கமாகக் குடும்பத்தினர் பறக்க....

அண்ணாச்சியிடம் சொன்னேன், ‘‘எல்லோரையும் பார்க்க சந்தோஷமாக இருக்கு. முன்பெல்லாம் காரில் செல்பவர்களைப்

பார்த்தால் பொறாமைவரும். குழந்தைகளின் கூச்சல் எரிச்சல்தரும். இழைந்து கொண்டு செல்லும் காதலர்களைப் பார்த்தால் கோபம்வரும். இப்போது அவையெல்லாம் போய்விட்டன"என்றேன்.

அண்ணாச்சி உற்றுப் பார்த்தார்.

"நிஜமாக அப்படி நீங்கள் உணர்ந்தீர்கள்என்றால் நீங்கள் கொடுத்து வைத்தவர்தான். சில மாதங்களுக்கு முன்வரை எனக்கும் அப்படித்தான் இருந்தது. ஆனால் ஒருநாள் எனக்குள்ளேயே சென்று பார்த்த போதுதான், நான் போடும் வேஷங்களும்... என்னை நானே இப்படி எல்லாம் சொல்லி ஏமாற்றிக்கொள்வதும் தெரிந்தது. மாற முயன்றேன். ஒரு சின்ன விஷயத்தில்கூட அன்னையை பின்பற்ற முடியவில்லை. யோக வாழ்க்கையெல்லாம் ரொம்ப பெரிய விஷயம். நம்மால் அது முடியாது'' என்று பெருமூச்சு விட்டார். ''இப்போதெல்லாம் வெறும் பிரார்த்தனை செய்வதோடு திருப்தி அடைகிறேன்"என்று முடித்தார்.

தியான மையம் செல்லும் நேரமாகிவிட்டதால் கிளம்பினேன். அண்ணாச்சி நெகடிவ் 'போர்ஸோ?' அன்னைக்கே 'உன்னால் முடியாது' என்று சொன்னவர்கள் என்னை விடுவார்களா? அவர் சாதாரண பக்தர். ஆனால் நான் அதையெல்லாம் தாண்டிய அன்பனாயிற்றே. சிரித்துக்கொண்டே சென்றேன்.

தியான நேரம் ஆரம்பமாகியது. மெதுவாக எண்ணம் அடங்கி, மூச்சை மட்டும் உணர, உள்ளே செல்ல ஆரம்பித்தேன்.... வழக்கமான அந்த சுகந்தம் இல்லாமல்.... என்ன இது? ஒரே இருட்டு? அலையலையாய் நிழலுருவங்கள்.... போட்ட கூச்சலில் காதே செவிடாவதுபோல இருந்தது....

❄ "சென்ற வாரம் ரவி கார் வாங்கியபோது, 'பார்த்து ரவி, இப்படித்தான் நிறைய பேர் கிரெடிட் கார்ட், லோன் என்று அகலக் கால் வைத்து மாட்டிக்கொள்கிறார்கள். நடுத்தெருவுக்கு வந்துவிடுகிறார்கள். உஷாராக இரு' என்று வாழ்த்துவதுபோலச் சொன்னாயே.... எனக்காகத்தானே....." பொறாமை கைகொட்டிச் சிரித்தது.

❄ எரிச்சல் குதித்தது. "ஆமாம்! தினேஷ் வீட்டு கிரஹப்பிரவேசத்தில், 'எனக்கும் அதுபோல மாமனார் கிடைத்தால், நானும்தான் இதுபோன்று கட்டுவேன்'என்று சொன்னபோது எனக்கு எவ்வளவு குஷி தெரியுமா?"....

❄ ''ரிசப்ஷனிஸ்ட் கீதாவைப் பற்றி நீ பேசுவதும், டூர் போய் வரும் ஜி.எம்.ஐயும், பி.ஏ. ஜானகியையும் பற்றி நீ நினைப்பதெல்லாம் எங்களுக்கு நல்ல தீனி..." கும்மாளமிட்டது காமமும், வக்ரமும்....

❄ ''பிரபாகரன் கஷ்டப்பட்டு முடித்த பிராஜக்டில் கடைசிநேரத்தில் சேர்ந்து, எல்லாம் நீயே செய்ததாகப் பேர் தட்டிக்கொண்டு சென்றாயே".... கயமை கட்டிப்பிடித்தது.

❄ இன்னும்.... இன்னும்.... பொய், கள்ளம், அதிகாரம், அகந்தை அத்தனையும் சுற்றி நின்று கும்மியடிக்க....

திடுக்கிட்டு விழித்தேன். இவ்வளவு கேவலமானவனா நான்? அன்னையை பார்க்கவே கூச்சமாக இருந்தது. திடீரென நிர்வாணமான உணர்வுடன் தடுமாறி வெளிவந்தேன்.

அண்ணாச்சி கடையைத் தாண்டும்போது, "என்ன சுரத்தில்லாமல் வருகிறீர்கள்?".... அக்கறையுடன் கேட்டார்.

"நீங்கள் சொன்னது சரிதான்! என்னை நானே ஏமாற்றிக்கொண்டு இருக்கிறேன். மாறவேண்டும்என்று மனது நினைத்தவுடனேயே, மாறிவிட்டதாக அகந்தை சொல்ல ஆரம்பித்துவிட்டது. அறிவும் அதையே நம்ப ஆரம்பித்துவிட்டது.... என்ன செய்யலாம்?"

அண்ணாச்சி சிரித்தார். "அது தெரிந்தால் நான் செய்யமாட்டேனா?... ஆனால்.... ஏதோ பேச்சுவாக்கில் நான் சொன்னதை வைத்து நீங்கள் கேட்டதால், அதையே செய்யுங்களேன். 'சொல்பவரெல்லாம் அன்னையே! சொல்வனவெல்லாம் அன்னையே!' என்று நினையுங்கள். அன்னையே வழிகாட்டுவார்...." அன்னை படத்திலிருந்து ஒரு சாமந்தியை எடுத்து கையில் அழுத்தினார். இழந்த சக்தி வருவதுபோல இருந்தது.

வீடு வந்து அன்னை படத்தின் முன் அமர்ந்தேன். "என்ன செய்ய வேண்டும்என்று தெரியவில்லை. உங்கள் வழிமுறைகளையெல்லாம் பின்பற்ற நீங்களே சொல்லிக்கொடுங்கள். இன்றிலிருந்து 'சொல்பவர் எல்லாம் அன்னையே! சொல்வனவெல்லாம் அன்னையே!' வழிகாட்டுங்கள்

தாயே!....'' வேண்டினேன். மெதுவாக ஒரு நிம்மதி பரவுவது போல இருந்தது.

இரவு சாப்பாட்டுக்கு பின் மகளுடன் பேசிக்கொண்டு இருந்தேன். திடீரென கேட்டாள், "ஏம்ப்பா! இவ்வளவு சத்தமா பேசறீங்க? நாம ரெண்டு பேர்தானே இருக்கோம்'' திடுக்கிட்டேன். அன்னை வேலை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இந்தச் சிறு விஷயத்தைக்கூடவா இது வரை செய்யவில்லை?.... யோசிக்கும்போதே அடுத்த குட்டு வந்தது, "நாலு நாள் நான் ஊரில் இல்லைனா, வீடே நாறிப்போகுது. போட்டது போட்டபடி, படித்த பேப்பரை மடிக்காமல், குடித்த காபி டம்ளரை கழுவாமல், யூஸ் அண்ட் த்ரோவைக்கூடவா தூக்கிபோடக்கூடாது. இதில் வாய் கிழிய என்னை சுத்தம், சுத்தம்என்று விரட்டுவதில் ஒன்றும் குறைச்சல் இல்லை'' சகதர்மிணி குட்ட....

இத்தனை அடிகளை மீறியும் அன்னையின் Cocoon of Peace கட்டிக்கொண்டு படுத்ததில் நல்ல தூக்கம் வந்தது.

மறுநாள்.... ஆபீஸில் உடனடியாக பிஸினஸ் டூர் கிளம்பச் சொல்ல, அடுத்த பதினைந்து நாட்களுக்கு அனைத்தும் மறந்துபோனது.

திரும்பி வந்தபோது.... ஆபீஸ் வேறு இடத்திற்கு மாறி இருந்தது. எனக்குத் தனி கேபின் கொடுக்கப்பட சந்தோஷமாக அமர்ந்தேன். அண்ணாச்சி வந்திருப்பதாக பியூன் வந்து சொல்ல, எழுந்து சென்று வரவேற்றேன். "என்ன இந்தப் பக்கம்?...."

"நான் கொள்முதல் செய்யும் கொடவுன் அடுத்த தெருவில்தான் உள்ளது. உங்கள் ஆபீஸ் இங்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதுதான்....'' என்றவாறே சுற்றிப் பார்த்தார்..... சிரித்தார்....

"உண்மையாகவே மாறவேண்டும்என்று முடிவு எடுத்துவிட்டீர்கள் போல இருக்கிறதே'' என்றார். அந்தக் கேள்வியை நான் எதிர்பார்க்கவில்லை. "எப்படித் தெரியும்?''....

"பழைய ஆபீசையும் இந்த ஆபீசையும் ஒப்பிட்டுப் பாருங்கள்''.....

யோசித்தேன். ஆம். பழைய ஆபீஸ் கொடவுன் கம் ஆபீஸ் என்பதால் எப்போதும் கெமிக்கல் நெடியும், பவுடர் தூசும் இருக்கும். பின்னால்



இருக்கும் சேரி மற்றும்.... கூவம் உபயத்தில் எப்போதும் 'நறுமணமும்', 'நல்ல வார்த்தைகளும்'.... ஆனால் இப்போது.... சுத்தமான, அமைதியான இடம், அழகான பூந்தோட்டம் உபயத்தில் சுகந்தம்.... புரிவதுபோல இருந்தது.

அகத்தின் குப்பையை, நாற்றத்தை புறம் காட்டிக்கொண்டே இருந்திருக்கிறது. நான்தான் புரிந்துகொள்ளவில்லை.... மெலிதாகக் கேட்டேன், "அப்படியென்றால் இந்த இடம் நான் மாறிவிட்டேன் என்பதற்கு அடையாளமா?''

அண்ணாச்சி வேகமாக மறுத்தார். ''இல்லவே இல்லை. அது அன்னையின் பரந்த மனதுக்கு அடையாளம். நாம் மாறவேண்டும்என்று நினைத்தவுடனேயே அதற்கான சூழ்நிலையைக் கொடுத்து நம்பிக்கை ஏற்படுத்துகிறார். ஆனால் நாம்தான் அவரை நம்புவதில்லை. நாம் ஓர் அடி அன்னையை நோக்கி எடுத்துவைத்தால், அவர் நான்கடி நம்மை நோக்கி வருகிறார்.... இவ்வளவு சொல்கிறேனே!.... பத்து ரூபாய்க்கு வெங்காயம் வாங்கும் கஸ்டமரை திருப்திபடுத்த என்னவெல்லாம் செய்கிறேன். அன்னையின் திருப்திக்கு எதையாவது செய்கிறேனா?.....'' தழுதழுத்தார்.

'ஆமாம்! இந்தச் சம்பளத்திற்காக, ஜி.எம். சொல்வதை அப்படியே கேள்வி கேட்காமல், ஏற்றுக்கொண்டு செய்ய முடிகிறது.... அன்னையின் சட்டங்களை அப்படி ஏற்றுக்கொள்ள முடிகிறதா?'.... அண்ணாச்சி சென்ற பிறகும் என் இயலாமை என்னை அழுத்தி உட்கார வைத்திருந்தது. திடீரென ஓர் உறுதி வந்தது. 'சொல்பவரெல்லாம் அன்னையே! சொல்வனவெல்லாம் அன்னையே!' என்பதை இன்று முழுவதும் கடைப்பிடிக்க முடிவு செய்தேன். அன்னைப் படத்தை ஏறிட்டேன். ''அன்னையே இதையே 'டோக்கன் ஆக்ட்'ஆக ஏற்றுச் சொல்லித் தாருங்கள். உங்கள் வழிமுறைகள் அனைத்தையும் பின்பற்ற இது ஓர் ஆரம்பமாக இருக்கட்டும்'' வேண்டினேன். அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்என்பது உண்மை. அழ தெரியாத, அழ திராணியற்ற குழந்தைக்கு அதன் தாய் தேடிவந்து பாலூட்டுவாள் என்பது சத்தியம். அது அடுத்த அடுத்த சம்பவங்களில் தெரிய ஆரம்பித்தது.

காண்ட்ராக்ட் மேனேஜர் கதவைத் தட்ட உள்ளே அழைத்தேன். “சார் Aviation Fuel Tank Protective Coating டெண்டருக்கு நாளை கடைசி தேதி சார்.... நீங்கள் ரேட் இன்னும் ஃபைனலைஸ் செய்யவில்லையே....” இழுத்தார்.

“ஏன் வழக்கம்போல ஏ.ஈ. சொல்படி செய்வதுதானே!”

“இல்லை சார்! அந்த ஆளுக்கு ‘கட்டிங்’ கொடுக்காமல் ஏதாவது செய்யமுடியுமா என்று பார்க்கிறேன். காரணம் இது கொஞ்சம் ரிஸ்க்கான வேலை. மெடீரியலில் அட்ஜஸ்ட் செய்ய முடியாது..... என்ன செய்யலாம்?”.....

பொறி தட்டியது. ‘சொல்பவரெல்லாம் அன்னையே! சொல்வனவெல்லாம் அன்னையே!’.... இலஞ்சம் கொடுக்கக்கூடாது.... நிமிர்ந்தேன். “சேகர்! ச.மீ.க்கு ரூ.820/- கோட் செய்யுங்கள்”. அதிர்ந்தார் சேகர். “சார்! இது மிக அதிகம். எல்-3கூட வரமாட்டோம்”.

“பரவாயில்லை. இந்த பிராஜக்டை பொருத்தவரை, நேர்மையாக செய்யவேண்டிய முறைப்படி, போடவேண்டிய பொருட்கள் முழுவதையும் போட்டுச் செய்யப்போகிறோம். யாருக்கும் எதுவும் தரப்போவதில்லை” என்றேன்.

மறுநாள் 11 மணி.... கதவு தட்டப்பட, “எஸ்! கம் இன்!” என்றேன். ஜி.எம். கைகுலுக்க கை நீட்டினார். “காண்ட்ராக்ட் எடுப்பதில் நீங்கள் புலி என்பதை மீண்டும் நிரூபித்துவிட்டீர்கள்” என்றார். புரியாமல் பார்த்தேன். “உங்கள் gamble ஜெயிச்சிடுச்சி. High risk job என்பதால் past experience அடிப்படையில் நம்மையே செய்யச் சொல்லிவிட்டார்கள். யாருக்கும் எதுவும் வேண்டாமாம். கெட்ட பெயர் வாராமல் இருந்தால் போதும் என்கிறார்கள்”... பேசிக்கொண்டே போக... அன்னை சட்டங்களின் மகிமை புரிய ஆரம்பித்தது.

இதுநாள்வரை புரியவில்லைஎன்று ‘கதை’ பண்ணிக்கொண்டிருந்த ‘டோக்கன் ஆக்ட்’டும் புரிய ஆரம்பித்தது. அடுத்து, கேயெஸ் எண்டர்பிரைசஸ் கருணாகரன் உள்ளே நுழைந்தார். ‘இவர் ஏன் வருகிறார்? ஏற்கனவே ஐம்பதாயிரம் தரவேண்டும். மீண்டும் கிரெடிட்



கேட்க வந்திருப்பாரோ? என்ன செய்வது?’ சிந்தித்தேன். எங்கள்மூலமாக அவர் செய்த சப்ளை ஒன்றுக்கான மூன்று இலட்சம் செக் எங்கள் வசம் இருந்தது. ஜி.எம். வேறு, ‘அவன் பாக்கியை வாங்கிவிட்டு இதைக் கொடு. இந்த சந்தர்ப்பத்தை விட்டால், நாம் எப்போதும் வசூல் செய்ய முடியாது’ என்றிருக்கிறார்.... குழம்பினேன்.

பெல் அடித்து, கிளார்க்கிடம் கருணாகரன் ஃபைலை எடுத்து வரச் சொன்னேன். உள்ளே நுழைந்த கிளார்க் மெதுவாக சொன்னார், “நல்ல மனுஷன் சார்! செக்கைக் கொடுங்கள். நிச்சயம் அதிலிருந்து நம் பாக்கியைத் தருவார்”. ‘சொல்பவரெல்லாம் அன்னையே! சொல்வனவெல்லாம் அன்னையே!’.... இந்தக் கொள்கை இதற்கு ஒத்துவருமா? அவரே விவேகம், பாகுபாடு எல்லாம் பார்க்கவேண்டும்என்று கூறி இருக்கிறாரே.... இந்த நேரத்தில் அவர் பிடி நம் கையில் இருப்பதுதானே விவேகம்.... அறிவு ஆயிரம் கேள்வி கேட்டது.... பதிலும் அதிலேயே இருந்தது. ஆம்.... பிடியை விடவேண்டும். அதுவும் நம்மிடம் வலு இருக்கும்போது பிடியை விட வேண்டும்.... துணிந்தேன். “ஓ.கே. செக்கைக் கொடுத்துவிடுங்கள்” என்றேன்.

கருணாகரனுக்கு நம்பமுடியவில்லை. சந்தோஷத்துடன் தம் பிரீப்கேஸை திறந்தார். ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தார். பிரித்துப் படித்த எனக்குக் கண்கள் விரிந்தது. நாங்கள் போய் மண்டியிட்டுக் கொண்டிருக்கும் ஒரு எம்.என்.சி.யின் சப்ளை ஆர்டர், அதுவும் நாங்கள் கனவிலும் எதிர்பாராத அளவிற்கு. கருணாகரன் தொடர்ந்தார், “சார்! இது முக்கியமான ஆர்டர். ஆனால் இதற்காக கிரெடிட் கேட்டால் நீங்கள் தரமாட்டீர்கள். அதனால் இந்த ஆர்டரை அப்படியே back to back நீங்களே செய்யுங்கள். எனக்கு கமிஷன் மட்டும் கொடுங்கள் போதும்” என்றார்.

எதையுமே நம்பமுடியாமல் அன்னையின் சிரிப்பையே பார்த்துக் கொண்டு இருந்தேன்.

இப்படியே அந்த வாரம் முழுவதும் ‘டோக்கன் ஆக்ட்’ஐ பின்பற்ற, அற்புதங்கள் அன்றாடமானது. மனம் சந்தோஷத்தில் திளைத்துக் கொண்டு இருந்தது.

அப்போதுதான் அந்த இடிசெய்தி வந்தது. எங்கள் கம்பெனியில் அகில இந்திய அளவில் product மேனேஜர் என்பது மிகமுக்கியமான, அதிகாரமிக்க போஸ்ட். வி.பி.யும், எம்.டி.யுமே தலைவணங்கவேண்டும். இம்முறை 'இன்டர்னல் ஸோர்சி'லிருந்தே எடுப்பது என்று முடிவு செய்ததால்.... அசரீரிபோல யாரோ சொல்ல.... 'சொல்பவரெல்லாம் அன்னையே! சொல்வனவெல்லாம் அன்னையே!' என்று அப்ளை செய்து இருந்தேன்.

மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தபோதுதான் அந்தச் செய்தி தாக்கியது. என்னைவிட பலமடங்கு ஜூனியர் ஒருவருக்கு அது தரப்பட்டது.

கோபம், அழுகை பெருக்கெடுக்க.... தியான மையம் கிளம்பினேன். அண்ணாச்சி எதிர்ப்பட்டார். "என்ன இந்த நேரத்தில்?".... சொன்னேன்.... "அன்னை என்னைக் கைவிட்டுவிட்டார்கள். அவரென்ன செய்யமுடியும்? எனக்கு அதிர்ஷ்டமில்லை...." புலம்பினேன்.

சிரித்தார் அண்ணாச்சி. ''உங்களுக்கு வேண்டியனவெல்லாம் செய்யத்தான் அன்னை இருக்கிறாரா?"

கேள்வியின் அழுத்தம் என்னைத் தாக்கியது. ''இருந்தாலும்.....'' இழுத்தேன்.

தொடர்ந்தார், "அன்னைக்கும் ஒரு நோக்கம் உண்டு. தாய் உள்ளத்துடன் அனைத்தையும் அளித்தாலும், குழந்தைக்கு ஒத்துக்கொள்ளாததை எந்தத் தாயும் தரமாட்டாள். ஒருவேளை இந்த போஸ்ட் உங்கள் அகந்தைக்கு ஊட்டச்சத்தாக அமையலாம். அகந்தை வளர உதவும் எதையும் அன்னை தரமாட்டார்கள். மற்றபடி அதிர்ஷ்டம், கர்மம் எல்லாம் அன்னைக்குட்பட்டவையே. இந்த மனநிலையை சமர்ப்பணம் செய்யுங்கள். அன்னை முடிவு அனைத்தும் நன்மைக்கே".

எந்த அறிவுரையையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் நான் இல்லை. என்றாலும் வேறு வழியில்லை. மனது துடிக்கும்போதெல்லாம் அடக்கி, அன்னையை நினைத்தேன். மெதுவாக ஓர் அமைதி பரவ ஆரம்பித்தது. என் ஆட்டத்தை நினைத்து எனக்கே வெட்கமாக இருந்தது. அன்னையின் முடிவின் காரணத்தைத் தெரிந்துகொள்ளும்



அளவிற்கு நான் புத்திசாலியா?.... நினைக்கவே அசிங்கமாக இருந்தது. "Sorry Mother! Let Thy Will be done..... Not my will" என்னையறியாமலேயே சொல்ல ஆரம்பித்தேன்.

சனி, ஞாயிறு விடுமுறை கழிந்து..... திங்களன்று தெளிந்த மனதுடன் ஆபீசுக்குள் நுழைய.... கைதட்டல்தான் என்னை வரவேற்றது. புரியாமல் விழித்தேன். கன்கிராட்ஸ்! ஆல் இண்டியா product மேனேஜரைத்தானே எதிர்பார்த்தீர்கள். உங்களை product மேனேஜர் (ஆசியா-பசிபிக்) ஆகவே போட்டிருக்கிறார்கள், தெரியுமா?.... வேறு எதுவும் என் காதில் விழவில்லை.... நெடுஞ்சாண்கிடையாக அன்னை படத்தின் முன் விழுந்தேன். என் நெகிழ்ச்சியை, அழுகையை, நன்றியைக் காட்ட நான் வெட்கப்படவில்லை. விழுந்தது நானா? என் அகந்தையல்லவா!.....

மாலை.... அண்ணாச்சி கடையில் நின்றேன். ''முகம் பயங்கரக் களையாகிவிட்டதே..... நாட்டை தாண்டிப்போற சந்தோஷமா?....'' கிண்டலடித்தார் அண்ணாச்சி.

"இல்லை! கோட்டை தாண்டிப்போற சந்தோஷம்....."

புரியாமல் பார்த்தார்.

"யோக வாழ்க்கையில் முதல் படி சமர்ப்பணம்தானே?"

"ஆமாம்".

"அது புரிந்துவிட்டதால், இனி கோட்டைத் தாண்டிவிடுவேன் என்ற நம்பிக்கை வந்துவிட்டதால், வந்த சந்தோஷம்" என்றேன்.

''எத்தனை படித்தாலும், எத்தனைச் சொற்பொழிவு கேட்டாலும் புரியவில்லை என்பீர்களே".....

"அது எனக்கு நானே சொல்லிக்கொண்ட போலிச் சமாதானம். அன்னை கையில் கொடுத்தால், என் எண்ணத்திற்கு மாறாக ஏதாவது செய்துவிட்டால், என்ன செய்வது என்று குயுக்தியும், தந்திரமுமாக என் அறிவு சொல்லும் நொண்டிச்சாக்கு. இனி 'டோக்கன் ஆக்ட்' எல்லாம் இல்லை. அனைத்தும் அன்னைச் சட்டப்படியே. அனைத்தும் சமர்ப்பணமே".

"உண்மையில் சமர்ப்பணம் என்பது ரொம்ப சிம்பிள் தெரியுமா?"

“எப்படி?”....

“அன்னையிடம் சொல்லிவிட்டு, அன்னைச் சட்டங்களுக்கு உட்பட்டு ஒரு காரியத்தைச் செய்தால் போதும், பலனைப் பற்றி நினைக்காமல்”.....

ஆமோதிப்பதுபோல வைர ஒளி மின்னலாய் அன்னையும், வெண்தாடி மேகமாய் பகவானும் அருள் மழையாய் பொழிய ஆரம்பிக்க, ஒவ்வொரு துளியிலும் அன்னையின் அரவணைப்பு.

*முற்றும்.*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சத்தியஜீவனுடைய ஒளி, மனதையும் உணர்வையும் தாண்டிய கடைசி கட்டத்தில் உடலைத் தொடும்பொழுது பொன்னொளி ஆகிறது.

***உடலைத் தொடும் பொன்னொளி.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உடலில் உணர்வில்லாதவருண்டு. மேளச் சத்தம் கேட்டவுடன் எழுந்து ஓடுபவருண்டு. அது போலன்றி, மனத்தால் உணர்வைக் கட்டுப்படுத்துபவருண்டு. உணர்ச்சியை மனம் கட்டுப்படுத்துவது போல் ஜீவியம் மனத்தைத் தாண்டியிருக்கிறது. அன்னை அதுபோன்றே செயல்படுகிறார். சிந்தனை நின்றபின் ஒரு பெரிய எண்ணம் உதயம் ஆகிறது. எண்ணத்தை நிறுத்தி ஜீவியத்தால் மட்டுமே செயல்பட முடியும். அதைச் சாதிக்க, சிந்தனையைத் தியாகம் செய்ய வேண்டும்.

***மௌனத்தில் பெரிய எண்ணம் உதயமாகும்.***





**I am witnessing the transformation of Nature.**

**இயற்கை திருவுருமாறுவதை நான் அனுதினமும் காண்கிறேன்.**

**— The Mother.**

குழந்தை வளர்வதைக் காணும் தாயாருக்குச் சலிப்பு ஏற்படாது. ஒவ்வொரு சொல்லைக் குழந்தை முதலில் சொல்வதையும் தாயார் கவனமாகக் கேட்பாள். அதேபோல் ஒவ்வொரு செயலைக் குழந்தை முதலில் செய்வதைத் தாயார் கவனித்து அறிவாள். வளரும் குழந்தை புதுஉலகில் நுழைவதைப்போல், அன்னை இயற்கை (Nature) திருவுருமாறி சத்தியஜீவியத்துள் நுழைவதைக் கண்ணுறுவதைக் கூறுகிறார்.

இன்று இந்தியா மாறுவதை உலகம் கண்டு வியக்கிறது. வறுமை வாழ்வு வளமான வாழ்வாக மாறும் சின்னங்கள் ஆயிரம்:

- ✡ **தினமும் ரோட்டில் டிராபிக் அதிகமாவதைக் காண்கிறோம்.**
- ✡ **புதிய பள்ளிகள், கல்லூரிகள் எழுவதை நாம் காண்கிறோம். எந்தப் பத்திரிகையும் அவற்றை விளம்பரம் செய்கின்றன.**
- ✡ **பள்ளம், படுகுழியான ரோடுகள், புதுமை பெறுகின்றன.**
- ✡ **கடைத்தெருவில் கூட்டம் அதிகமாகிறது.**
- ✡ **வாடிய முகம் மாறி மக்கள் வளமாகத் தென்படுகிறார்கள்.**
- ✡ **சைக்கிள் இல்லாத வீட்டில் மோட்டார் பைக், கார் வருகிறது.**
- ✡ **பஸ், கடை, ஹோட்டல்களில் ஆங்கிலச் சொற்கள் காதில் விழுகின்றன.**
- ✡ **நாடு சுபிட்சமான பாதையில் நுழைந்து பவனி வருகிறது.**

பகவான் ஸ்ரீ அரவிந்தர் அவதரித்தபின், “இறைவன் வரும் தருணம்” உலகுக்கு வந்தது. அதை உலகம் அறியவில்லை. அவரே அறியவில்லை.

அவர் மனம் சுதந்திரத்தை நாடியது. சுதந்திரத்திற்காக பகவான் யோகம் செய்தார். 1910இல் சூட்சும உலகில் சுதந்திரம் உருவாயிற்று.

- ✡ **இறைவன் பகவானுக்கு அடுத்த பணியை ஜெயிலில் அளித்தார்.**

  **"புதுவைக்குப் போ" என அசரீரி கூறியது.**

- ✡ **சுவாமி விவேகானந்தர் சத்தியஜீவியத்தைப் பகவானுக்குக் காட்டினார்.**
- ✡ **1910இல் ஜெயிலில் பகவான் சத்தியஜீவியத்தை எட்டி, நாராயண தரிசனம் கண்டார்.**
- ✡ **அவர் தவம் யோகமாக மாறி, 1956இல் சத்தியஜீவியம் புவியில் இறங்கியதை அன்னை பிப்ரவரி 29இல் கண்டார். பொன்னொளி பிரவாகமாக மனித வாழ்வில் புகுந்தது.**
- ✡ **உலகில் உள்ள தமஸ் அதை விழுங்கியது.**
- ✡ **நாளாக நாளாக Nature இயற்கை சத்தியஜீவியத்தை எதிர்ப்பதைக் கைவிட்டு, சத்தியத்துடன் ஒத்துழைக்க ஆரம்பித்தது. இதைக் கண்ட அன்னை மேற்கண்டவாறு கூறுகிறார்:**
  - ❀ **இயற்கை அறியாமையாலும், பொய்யாலும் சூழப்பட்டு, கடுமை, கொடுமையை வெளிப்படுத்துவது மாறிவருவதை அன்னை காண்கிறார்.**
  - ❀ **இதன் பலனாக உலகில் கொடுமை பலத்தை இழக்கிறது. தொழிலாளி, மருமகள், சிறுவர், ஊனமுற்றவரை உலகம் கொடுமைப்படுத்துவதைக் குறைத்து, அவர்கள் வாழ்வு மலர வேலை செய்கிறது.**
  - ❀ **அறியாமை மாறி அறிவாக வெளிப்படுவதை நாம் கல்வி பரவுவதில் காண்கிறோம்.**
  - ❀ **கொடுமை குறையும்முன் இடம் மாறுகிறது. மாமியார் கொடுமை, மருமகள் கொடுமையாகிறது. முதலாளி கொடுமை, தொழிலாளி கொடுமையாகிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் இயற்கை திருவுரு மாறுவதைக் காட்டுகின்றன.**

❀❀❀



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 877) அழைப்பு ஆழ்மனத்துள் சென்றால் அது நிலைக்கும். ஆழ்மனமே அழைத்தாலும் அது நடக்கும்.

***நிலையான அழைப்பு ஆழ்மனத்து அழைப்பு.***
***அழைப்பு நிலைக்க ஆழ்மனதுள் செல்லவேண்டும்.***

- ✡ **அழைப்பு ஆழ்மனத்துள் செல்வதற்கும், ஆழ்மனமே அழைப்பதற்கும் உள்ள வித்தியாசம் நாம் ஒரு பெரிய குடும்பத்துள் ஒரு நாள் போய் கலந்து கொள்வதற்கும், அப்பெரிய குடும்பமே நம்மை அழைப்பதற்கும் உள்ள வித்தியாசம்.**
- ✡ **வாயால் Mother என்பதைப் பொதுவாக அழைப்புஎனக் கொள்கிறோம். அதே சொல் தானே எழ பெருமாறுதல் வேண்டும். ஒரு பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள ஆசைப்பட்டு அவர்களை அணுகி, நம்மை அழைக்க வேண்டி ஓர் அழைப்புப் பெறுவதற்கும், அவர்களே நம்மை அழைக்க விருப்பப்படுவதற்கும் உள்ள வித்தியாசம். அடுத்த, அடுத்த கட்டங்கள் உள. முடிவாக அவ்விழாவில் சொற்பொழிவு ஆற்ற நம்மை அழைப்பது, நம் சௌகரியத்தைக் கருதி விழாவை ஏற்படுத்துவது.**
- ✡ **வாயின் சொல், மனத்தின் எண்ணம், ஆழ்மனத்தின் உந்துதல் (impulse), நெஞ்சு கொடுக்கும் குரல், முழு நெஞ்சமும் இறைவனில் கரைந்து, கரைந்த உணர்வு காதலாகிக் குரலாக எழுவது, உடலின் உணர்வு உறவு வேண்டி அழைக்கும் குரல்*, உடல் தானே விழித்தெழுந்து மனம், ஆத்மாவை விலக்கி, சைத்தியப்புருஷனையும் விலக்கி, இறைவனுடன் Supreme நேரடியாகத் தொடர்பு கொண்டு நெஞ்சம் தழுதழுத்து எழும் குரல் பிரபஞ்சத்தில் ஆத்மாவின் அசைவாக, அலையாக சூட்சும உலகில் புரளும்.**

---

* **பாண்டி கடற்கரையிலிருந்து புறப்பட்ட கப்பல் 'ஓம்' என்று எழுப்பிய குரல் அன்னைக்குக் கேட்டதை அன்பர்கள் அறிவார்கள்.**

**அதைக் கடந்த நிலைகளும் உள்ளன. அவை பூரணயோக எல்லையைக் கடந்தவை.**

- ✡ **அழைப்பின் இலக்கணத்துடன் அழைத்தால் அழைப்பை மறுக்க எவராலும் இயலாது.**
- ✡ **அழைப்பின் இலக்கணம் இலக்கியமானால் இருவரும் அன்பில் இரண்டறக் கலப்பர்.**

ஆழ்மனம் என்பது sub-conscient. இது இருண்டது. இதனுள் நம் பூர்வீக ஞாபகம் முழுவதும் புதைந்துள்ளது. உலகின் பூர்வீகமே உள்ளது என்கிறார் அன்னை. இது வெளிப்பட்டால் ஆபாசம் பரவும்; பயங்கரம் நிகழும். நான் இதைப் பாதாளம்என்ற சொல்லால் குறிக்கிறேன். பாதாளம் பயங்கரமாக இல்லாமல் உலகம் முழுவதும் பரவியிருக்கலாம். அது விதிவிலக்கு. அழைப்பு உள்ளே போகும்பொழுது பயங்கரமான பாதாளம் ஒரு க்ஷணம் பவித்திரமாக மாறலாம். நான் மேலே கூறும் அழைப்பு அங்கிருந்து எழுவது.

- ❀ **அந்த அழைப்பு அகிலமெங்கும் கேட்கும்.**
- ❀ **கேட்பது நிலைக்கும்.**
- ❀ **அதன்பின் அவ்வழைப்பு அமிர்தமாக மாறும்.**
- ❀ **அழைப்பின் தரம் உயர்ந்தால் நாம் அழைத்தாலும், அன்னை அழைத்தாலும் அழைப்பு ஒன்றே.**
- ❀ **அந்நிலையில் கொடுப்பது பெறுவது, பெறுவது கொடுப்பது.**
- ❀ **அப்பொழுது அழைப்பு அமிர்தமாகி, அன்பாகி, அனைத்துமாகும்.**

- ✡ **நாம ஜபம் நாடறிந்தது.**
- ✡ **ஜபம் வாயால் உச்சரிப்பது.**
- ✡ **மிகஉயர்ந்ததாகக் கருதப்பட்டாலும் அது வாய்க்குரியது.**
- ✡ **அதுவே மோட்சமும் தரவல்லது.**
- ✡ **பலன் சொல்லைப் பொருத்ததன்று. மனதைப் பொருத்தது.**
- ✡ **மனத்தைவிட ஜீவனைப் பொருத்ததுஎன்பது பொருத்தமாகும்.**



- ✡ **அழைப்பும், நாம ஜபமும் தோற்றத்தில் ஒன்று போன்றவை.**
- ✡ **அழைப்பு திருவுருமாற்ற வல்லது.**
- ✡ **அழைப்பில் சொல்லில்லை. சொல்லிருந்தால் அது அழைப்பாகாது.**
- ✡ **அழைப்பு என்பது பரிணாமத்திலுள்ள பிரம்மம், சிருஷ்டிக்கு அப்பாலுள்ள பிரம்மத்தைக் கூவி அழைப்பதாகும்.**
- ✡ **அது வாயாலோ, வாய்ச்சொல்லாலோ இயலாது.**
- ✡ **மேல்மனத்தால் செய்யக்கூடிய செயலில்லை அது.**
- ✡ **உள்மனத்திற்கும் அது உரியதில்லை.**
- ✡ **அதற்குரிய இடம் அடிமனம்.**
- ✡ **அடிமனத்திலும் அங்குள்ள குகையில் உள்ள சைத்தியப்புருஷனுக்குரியது.**
- ✡ **நிஷ்டையால் அழைப்பைச் செய்ய இயலாது.**
- ✡ **அழைப்புக்குரியது சமர்ப்பணம்.**
- ✡ **மேல்மனம் தன்னை அடிமனத்திற்குச் சமர்ப்பணம் செய்யும் சமர்ப்பணம் அது.**
- ✡ **The Mother என்ற நூலில் முதல் வாக்கியம் அழைப்பை விவரிக்கும்:**

**Call from below and the answering Grace from above.**

**கீழிருந்து எழும் அழைப்பும் மேலிருந்து பதில் கூறும் அருளும்**

**என்பது அவ்வாக்கியம்.**

- ✡ **இந்த யோகத்தின் சுருக்கமாக அழைப்பைக் கூறலாம்.**
- ✡ **தவறாதது ஒன்றுண்டுஎனில் அதை அழைப்பு என்று கூறலாம்.**
- ✡ **அழைப்பு நெஞ்சை நிரப்பும்.**
- ✡ **முடிவில் ஜீவனை அன்னையால் நிரப்பும்.**
- ✡ **திருவுருமாற்றத்திற்குரிய 'பச்சைக்கொடி' அழைப்பு.**
- ✡ **அழைப்பு ஆரம்பித்தால் அதற்கு முடிவில்லை. உள்ளேயுள்ள அன்னையே அதை ஏற்றுக்கொள்வது அழைப்பு பூர்த்தியாவதாகும்.**

❀❀❀

**878) அகந்தையைப் பிரகிருதி உற்பத்தி செய்தது. சைத்தியப் புருஷன் ஆன்மாவினுடையது. அகந்தையைக் கரைத்து சைத்தியப்புருஷனை நாடுதல் எனில், நம் செயல் மையம் இயற்கையிலிருந்து ஆன்மாவுக்குப் போகிறது எனலாம். இதன் முதல் அறிகுறியாக எல்லா இயற்கைச் செயல்களும் - எண்ணம், உணர்வு - நம்மால் ஆரம்பிக்கப்படுவது நின்று ஆன்மா ஆரம்பிப்பதற்காக நாம் காத்திருப்பதாகும்.**

*நம் செயல் அழிந்தால், இறைவன் செயல் சைத்தியப்புருஷன்மூலம் வெளிப்பட்டு செயல்படும்.*

- ✡ தெரிந்ததை மனிதனால் செய்யாமலிருக்க முடியாது.
- ✡ தெரிந்ததைச் செய்யும்பொழுது திறமைக்குள்ள பலன் வரும்.
- ✡ தெரிந்ததைச் செய்யாமலிருக்க வேண்டும் என்பதற்குத் தேவையான கட்டுப்பாடு மனிதனுக்கில்லை.
- ✡ பத்து பேருள்ள இடத்தில் ஒருவருக்கு ராஜீவ் காந்தியின் பெண் பெயர் நினைவு வரவில்லை என்றால், அங்குள்ள எவருக்கும் அது தெரியாத சமயம், நமக்கு அது தெரியுமானால், அதைச் சொல்லாமலிருக்க முடியாது. சொல் நம்மை மீறி எழும். அதைச் சொல்லாமலிருப்பது, தெரிந்ததைச் செய்யாமல் இருப்பது. நமக்குத் தெரிந்ததைச் செய்யாமலிருந்தால் அன்னை செயல்படுவார். அவர் சைத்தியப்புருஷன்மூலம் செயல்படுவார்.
- ✡ நமக்கு முடியாத நேரம், தெரியாத நேரம் இயலாமையால் சும்மா இருக்கிறோம். அப்படிச் சும்மா இருக்கும்பொழுது அன்னை அபரிமிதமாகச் செயல்படும் நிகழ்ச்சிகள் ஏராளம். முடியாதபொழுது சும்மா இருப்பதைப் போல் முடிந்தபொழுதும் சும்மா இருப்பது கட்டுப்பாடு. அது முடிவான கட்டுப்பாடு. அது சரணாகதிக்குச் சமம்.
    - ❀ அப்படியிருக்கும்பொழுது கிடைக்காதது கிடைக்கும்.
    - ❀ கிடைப்பது பெரியதாகவோ, சிறியதாகவோ இருக்கும்.
    - ❀ கிடைப்பது எவ்வளவு பெரியது என்பது நம் பர்சனாலிட்டி சைஸைப் பொருத்தது.



    - ❀ அமெரிக்க வரலாற்றில் அப்படிப் பெரிய மனிதர்களாக வந்தவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள். அந்த நாட்டு சூழ்நிலை இந்த மனப் போக்குக்கு ஏற்றது. $125 சம்பளமில்லாதவர் 15 அல்லது 20 ஆண்டுகளில் 10 பிராஜெக்ட்டுக்கு உடையவராகி $190 மில்லியன் பெறுமான கம்பனி நடத்துவது அமெரிக்காவில் நடந்த செய்தி. அங்கு இயல்பான சூழ்நிலையில் அதற்கேற்ப நடந்தவருக்கு அப்பலன் கிடைத்தது. இந்தச் சட்டத்தைப் புரிந்துகொண்டு, இதற்குரிய மனப்பான்மையுடன் இன்று இந்தியாவில் இப்படிச் செயல்படும் இளைஞருக்கு இதே பலன் உண்டு. 1989இல் 25 இலட்ச முதலுடன் தொழில் ஆரம்பித்தவர் இன்று 500 கோடி வியாபாரம் செய்வதை உலகம் அறியும்.
    - ❀ 'நான்' அழிந்தால் அன்னை எழுவார். நாம் - நான் அழிந்த நாம் - அகிலத்தை ஆள்வோம்.
- ✡ நம் செயல் என்பது பிரகிருதியின் செயல்.
- ✡ அது அகந்தையின் செயலாகும்.
- ✡ அகந்தையை உற்பத்தி செய்தது பிரகிருதி.
- ✡ சைத்தியப்புருஷன் ஆன்மாவின் பிரதிநிதி.
- ✡ பிரகிருதிக்கும் ஆன்மா உண்டு.
- ✡ பிரகிருதி செயல்படுவதால், அதன் ஆன்மாவும் செயல்படும்.
- ✡ அனுபவம் பிரகிருதிக்கு, அனுபவச் சாரம் ஆன்மாவுக்கு.
- ✡ அந்த ஆன்மாவே சைத்தியப்புருஷன்.
- ✡ நாம் செயல்படும்வரை சைத்தியப்புருஷன் செயல்படாது.
- ✡ நாமோ, சைத்தியப்புருஷனோ இருவரில் ஒருவரே ஒரு சமயம் செயல்பட முடியும்.
- ✡ சைத்தியப்புருஷன் ஸ்ரீ அரவிந்தத்திற்கேயுரியது.
- ✡ எதுவும் ஆன்மா இல்லாமலிருக்க முடியாது.
- ✡ எனவே பிரகிருதியும் அப்படியே.
- ✡ பிரகிருதியின் ஆன்மா சாட்சியாக இருக்க முடியாது.
- ✡ அது செயலில் பங்குகொள்ளும்.

- ✡ **செயலில் பங்குகொள்வது அனுபவம்.**
- ✡ **அனுபவத்தின் சாரம் ஆத்ம விசாரம்.**
- ✡ **அனுபவம் கணத்தில் மறையும்.**
- ✡ **சாரம் மறையக்கூடியதில்லை.**
- ✡ **சாரம் சேர்ந்து உருவம் பெறும்.**
- ✡ **அவ்வுருவம் சைத்தியப்புருஷன் எனப்படும்.**
- ✡ **நாம் செயலற்றபின் ஆன்மா செயல்படும்.**
- ✡ **நம் செயல் அகந்தையின் செயல்.**
- ✡ **சைத்தியப்புருஷனின் செயல் இறைவனின் செயல்.**
- ✡ **அடிமனக் குகையிலுள்ள சைத்தியப்புருஷன் செயல்பட மேல்மனம் வருகிறான்.**
- ✡ **சைத்தியப்புருஷன் மேல்மனம் வருவது பரிணாமம்.**
- ✡ **பரிணாமம் இறைவனுக்கு ஆனந்தம் தருவது.**
- ✡ **அவ்வானந்தத்திற்காகவே சிருஷ்டி ஏற்பட்டது.**
- ✡ **மனத்தில் உதித்த சைத்தியப்புருஷன் வளரக்கூடியது.**
- ✡ **இதன் பாதை மூன்று: (1) நெஞ்சுக்குப் பின்னால் (2) ஈஸ்வரனை நோக்கிப் போவது (3) உடலையடைவது.**

*தொடரும்.....*

❀❀❀

## ஜீவிய மணி

**பரமனை நாடும் பக்தியின் பவித்திரம்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியுமானால் அளவு கடந்த சக்தி உன்னுள்ளே எழும்.

***கட்டுப்படும் உணர்வு பெருகி வரும் சக்தி.***





**It is here we see another alternative.**
**It is that we are looking for.**
**நாம் தேடும் வாயில் இங்குள்ளது.**

தவம், யோகம் நம் நாட்டின் பிறப்புரிமை. ஏகபோக உரிமை இல்லாவிட்டாலும் பிறப்புரிமை, சிறப்புரிமையான இடம் தவம். இன்று உலகத்தில் யோகம் என்று குறிப்பிடப்படுவது ஹடயோகம். ஒரு துறையை சாஸ்திரமாக்குவது விஞ்ஞானம் எனப்படும். ஹடயோகம் இன்றுவரை அன்றுபோல் பயன்பட்டு வருகிறது. அதை improve அபிவிருத்தி செய்ய முடியவில்லை. உடலின் ஆசன அமைப்பு உயிரையும், உள்ளத்தையும் கட்டுப்படுத்தி, ஆன்ம விடுதலை தரும் பயிற்சி இது. பிராணயாமம் என்பது சக்திவாய்ந்தது. இதை 5 ஆண்டுகள் பயின்றவர் எந்த வியாதியையும் குணப்படுத்தக்கூடியவர். ஞானயோகம் வெளியுலகை தம் எண்ணத்தால் அசைக்கும் சக்தியைத் தரும். பசியோடு இருந்த விவேகானந்தரின் எண்ணம் படுத்திருந்த பக்ஷணக்கடை முதலாளியை எழுப்பி பசியாறியதை பல முறை பலரும் படித்திருக்கலாம்.

பூரணயோகம் உலகில் தீமை, மரணத்தைக் கரைக்கவல்லது. ஒரு சிறு குழுவினர் செய்யும் தவத்தால் உலகம் மாறும். ஹடயோகம், கர்மயோகம், ஞானயோகம் மேல்மனத்தில் செய்யப்படுவது. அவற்றிற்கு மூலம் அக்ஷரப்பிரம்மம். அதைக் கடந்தது முழுப்பிரம்மம், நாம் சத்புருஷன் எனக் கூறுவது. அதைக் கடந்த நிலையுண்டு. அந்நிலைக்குப் பூரணம் உண்டு. அதை உலகில் காண முயல்வது பூரணயோகம். மேல்மனத்தின் கீழ் உள்ளது உள்மனம். அடிமனம் அதையும் கடந்தது. மேல்மனம் நாம் மட்டும் அறிவது; காலத்தில் செயல்படுவது. உள்மனம் ரிஷி அறியக் கூடியது; காலத்தைக் கடந்தது. அடிமனம் அதையும் கடந்து ஆழ்மனம் தொடும் பாதாளத்தையும் பரமாத்மாவையும் இணைப்பது. அது பிரபஞ்சம்

முழுவதும் பரவியது. பூரணயோகத்தை அங்கிருந்து செய்ய வேண்டும். இதுவரை செய்த யோகங்கள் மேல்மனத்திற்குரியவை. எப்படி அடிமனத்தை அடைவதுஎன பகவான் அறியவில்லை. எந்த தவசியும் நிஷ்டையில் உள்மனத்தைத் தொட்டு மனோமயப்புருஷனைக் கண்டு, அவன்மூலமாக ஜீவாத்மாவை அடைந்து, ஜீவன்முக்தனாகிறான். பூரணயோகம் அதை நாடவில்லை. என்ன செய்வதுஎன பகவான் 10 ஆண்டுகள் முயன்றபொழுது, மனோமயப்புருஷன் உள்ள உள்மனத்தில் மேலும் இரு வாயில்களிருப்பதைக் கண்டார். அவற்றுள் ஒன்று அடிமனத்தின் சைத்தியப்புருஷனை அடையும் வாயில். விவேகானந்தர் இலட்சியத்தைக் காட்டினார்; பாதையைக் குறிப்பிடவில்லை. நிஷ்டையைக் கைவிட்டு, சரணாகதியை மேற்கொண்டால் அவ்வாயில் தெரியும்என அறிய பகவானுக்குப் 10 ஆண்டுகளாயிற்று.

- ✡ **நாம் செய்யும் பிரார்த்தனை நிஷ்டை போன்றது. "நான் கேட்டதைக் கொடுத்து விட்டால், மீதியை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்பது அது. அது நம் திறமையை நம்புவது. இதுவரை எவருக்கும் பயன்படவில்லை என கருமி மைதாஸ் கதை கூறுகிறது.**
- ✡ **சரணாகதி அன்னையை நம் வாழ்வில் செயல்பட அழைப்பது. அது நம் வாழ்வை உலகில் அதிர்ஷ்டமாகவும், மேல்உலகில் அமிர்தமாகவும் மாற்றும்.**
- ✡ **மேற்கூறிய கருத்து இக்கருத்துகளின் தத்துவம்.**

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**உடல் படும் துன்பம் உண்மையானதன்று.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# எதை நம்பலாம்.....

நம்பிக்கை பல விதத்தின. முழுவதும் பலிக்கும்பொழுதும் நமக்கு நம்பிக்கை அன்னையிடமிருப்பதில்லை. மருந்து, டாக்டர், சட்டம், சிபாரிசு, நம் நாணயம், திறமை, நண்பர் மீது நம்பிக்கையிருப்பது வழக்கம். அப்படியிருந்தாலும் அன்னை அந்த நம்பிக்கைமூலம் செயல்படுவார். அவற்றைக் கடந்து அன்னை மீதிருப்பது உயர்ந்த நம்பிக்கை.

நெடுநாட்களுக்கு முன்னால் பாங்க் உதவியை ஊராருக்குப் பெற்றுத் தர அன்பர் முயன்றபொழுது அத்தனை காரியங்களையும் நண்பர்மூலம் செய்தார். அது விஷப்பரிட்சையென அனைவரும் கருதியபொழுது அன்பர் உற்சாகமாகச் செய்ய நண்பர் முக்கியக் காரணமானார்.

✡ *பணம் பட்டுவாடா செய்யும் முதல் நாள் நண்பர் அன்பரைச் சந்தித்துத் தமக்கு இவ்விஷயத்தில் அபிப்பிராயமில்லை எனவும், பணம் கொடுத்தபின் வசூல் செய்ய முடியாது எனவும் கூறினார்.*

✡ *அன்னையை மட்டும் நம்பவேண்டிய அன்பர் முழுவதும் நண்பரை நம்பியது தவறு. கடைசி நேரம் இப்படித் தலைகீழாகப் பேசினால், ஆரம்பிக்கவே முடியாது என்ற நேரம் "நான் அன்னையை மட்டும் நம்பவேண்டும் என அன்னை கூறுவதாக இதை எடுத்துக் கொள்கிறேன்" எனப் புரிந்து, நண்பர் மறுப்பை ஏற்றார். பணத்தை அனைவருக்கும் கொடுத்தார்.*

✡ *தேதி தவறாமல் பணம் வந்துவிட்டது. அப்பொழுது அன்பர், "நண்பர்மூலம் இவ்வளவு முழுமையாகக் காரியம் நடந்திருக்காது. நண்பர் விலகியதால் இது நடந்தது" என அறிந்தார்.*

**....... அன்னையை மட்டும் நம்பலாம்**

❀❀❀

# ரமண மகரிஷி

தூக்கத்தில் மனிதன் சச்சிதானந்தத்தைத் தொட்டு தெம்பு பெறுகிறான். உழைப்பாளி மேலே போகமுடியாவிட்டால், கீழே போகிறான். பாதாளம் என்பது இருண்ட சச்சிதானந்தம். அயர்ந்து தூங்குபவன் அதைத் தொடுவான்.

ரமண மகரிஷி சிறு வயதில் தம்மை மறந்து தூங்குவார். அது அனைவருக்கும் கேலிக்குரிய விஷயம். சிறுவர்கள் அவரைத் தூக்கிக் கொண்டு போய் வேறிடத்தில் போடுவார்கள். அப்பொழுதும் அவர் விழிப்பதில்லை.

✡ **பிற்காலத்து நிஷ்டை அவருக்கு சிறுவயதில் அயர்ந்த தூக்கமாக வந்துள்ளது.**

✡ **அதனால் அயர்ந்து தூங்குபவர் அனைவரும் ரிஷி அம்சம் உடையவர் எனக் கூறமுடியாது.**

ஆசனம் கற்றுக்கொண்ட மாணவன் சவாசனம் பயிலும் நேரம் தன்னை மறந்தான். அதனால் பயந்துவிட்டான். தன்னை மறக்கும் நிலை ஆத்மா வெளிவரும் நிலை. அனுபவமில்லாத பொழுது பயம் எழும்.

✡ **அன்னையின் அழைப்பு தெரிவதில்லை என்பது போல்<br>ஆத்மாவின் விழிப்பும் புரிவதில்லை.**

இதனால் ஏற்படும் நிகழ்ச்சிகள் விபரீதமானவை, வேடிக்கையானவை, விளக்கமுடியாதவை. புவனேஸ்வரி என்ற வேலைக்காரப் பெண்ணை பெயர் என்ன என்று விசாரித்த பிரெஞ்சுக்காரர் இந்திய ஆன்மீகம் பயிலுபவர். புவனத்திற்கு அவள் ஈஸ்வரி என்ற விளக்கம் பெற்ற அவர், அப்பெயரை அவளுடைய அம்சம் என நினைத்து மணந்துகொண்டார்.

❀❀❀